மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 16 புதன்கிழமை (29.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 154

# வடபகுதி நிலைவரம் குறித்து ஒபாமா நிர்வாகம் ஆராய்வு

## உயர்மட்ட பிரமுகர்கள் பலரும் பங்கேற்பு

வாஷிங்டன், ஏப்ரல் 29



இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான நிலை மிகவும் மோசமடைந்துள்ளமை குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம் சமீபத்தில் அவசர கூட்டம் ஒன்றைக் கூட்டி அங்குள்ள நிலைமை குறித்து ஆராய்ந்துள்ளது.

இலங்கை குறித்து முதல் தடவையாக நடைபெற்றுள்ள இந்தக் கூட்டத்தில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சு, பென்ரகன், தேசிய பாதுகாப்புச் சபை உட்பட பல அமைப்புகளின் முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டனர் என வெள்ளைமாளிகை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல்: நவம்பர் 19 க்குப் பின்னர் எந்த நேரத்திலும்...

கொழும்பு, ஏப். 29

2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். இந்த வருடத்தின் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த வேளையிலும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம். எந்தச் சந்தர்ப்பதிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் வல்லமை ஜனாதிபதிக்கு உள்ளது - என்று ஊடகத்துறை அமைச்சர் லஸ்மன் யாப்பா அபயவர்தன தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தாக்குதல் நடத்த எமக்கு உரிமை உண்டு; எவரும் அது குறித்துக் கேள்வி எழுப்ப முடியாது

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஏப்.29

இராணுவத் தாக்குதல் நடத்த எமக்கு உரிமை உண்டு. தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாலேயே நாம் அதனைச் செயற்படுத்தினோம். அது குறித்து எவரும் கேள்வி எழுப்ப முடியாது.

கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 90 ஆவது ஆண்டு விழாவில் பேசிய போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மக்கள் பாதுகாப்பு வலயத்துக்குள் மனிதாபிமானப் பணியாளர்களை அனுமதிக்குக!

### பிரிட்டிஷ் அமைச்சர் இலங்கை அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

போர் நடைபெறும் பகுதிகளிலும், நலன்புரி நிலையங்களிலுமுள்ள மக்கள் மத்தியில் மனிதாபிமானப் பணியாளர்கள் செல்வதற்கு அனுமதிக்குமாறு நேற்று முன்தினம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மைக் போஸ்டர் இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தேடுதல்; 15 தமிழர் நேற்றுக் கைது

கொழும்பு, ஏப்.29

திருகோணமலை சாம்பல்தீவு, நிலாவெளி செல்வநாயகபுரம், கிண்ணியா ஆகிய பகுதிகளில் நேற்று இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 15 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது அடையாளங்களை உரிய முறையில் உறுதி செய்யாதவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சுவீடிஷ் அமைச்சர் வருவதற்கு அனுமதி மறுப்பு! தூதுவரை அந்நாடு திருப்பி அழைத்தது!!

### ராஜதந்திர உறவில் முறுகல் நிலை ★

கொழும்பு, ஏப்.29

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு சுவீடனின் வெளிவிவகார அமைச்சர் கார்ல் பில்ட்க்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இலங்கைக்கான தூதுவரை சுவீடன் தனது நாட்டுக்கு உடனடியாகத் திருப்பி அழைத்துள்ளது.

இதன் காரணமாக இரு நாடுகளுக்கு மிடையில் இராஜதந்திர நெருக்கடி தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமக்கு அனுமதி மறுக்கப்பட்டமை, சுவீடனுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவிற்கு நல்லதல்ல எனவும் சுவீடன் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிகாரிகள் தமக்குத் திடீரென அனுமதி அளிக்க மறுத்துள்ளனர் என்றும் இது மிகவும் விசித்திரமான செயற்பாடு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளை செவிமடுக்கும், - அதன்படி செயற்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள அவர் இலங்கையில் மிகவும் மோசமான மனிதாபிமான நெருக்கடி காணப்படுகின்றது. இலங்கை அதிகாரிகள் அதனை ஓரளவுக்காவது தளர்த்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சமூகம் போர் நிறுத்தத்தை வலியுறுத்தினாலும் அரசு அதனை ஒரு போதும் நடைமுறைப்படுத்தாது

### ★ ஊடகத்துறை அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, ஏப்.29

சர்வதேச அனைத்துலக சமூகத்திடம் இருந்து எந்தளவுக்கு அழுத்தங்கள் வந்தாலும், போர் நிறுத்தம் ஒன்றை அரசாங்கம் ஒருபோதும் நடைமுறைப்படுத்தாது ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன இவ்வாறு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், எழுப்பபப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே இந்தியா வழங்கியது என்கிறார் அமைச்சர் சிதம்பரம்

### தமது நாட்டினால்தானாம் போர் முடிவுக்கு வந்தது!



கொழும்பு, ஏப். 29

இலங்கைக்கு ராடர் மற்றும் தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே வழங்கினோம். பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளே பாரிய ஆயுங்களை வழங்கின - என்று இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து நேற்றுத் தெரிவித்தவை வருமாறு -

இந்தியாவின் இராஜதந்திர முயற்சியினாலேதான் இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சர்வதேசத்தின் அழுத்தத்தினாலும் இந்தியாவின் இராஜதந்திர அணுகுமுறையினாலும் மட்டுமே இலங்கை இரண்டு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வலைஞர்மடம் பகுதியில் தற்கொலைத் தாக்குதல்

### முறியடிக்கப்பட்டதாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப்.29

பாதுகாப்பு வலயத்தின் வலைஞர் மடம் பகுதியில் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது என பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

வெடி மருந்து நிரப்பப்பட்ட வாகனமொன்றைப் பயன்படுத்திப் படையினர் மீது தாக்குதலை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் திட்டமிட்டனர் எனவும், தொலைவிலிருந்து குறிப்பிட்ட அந்த வாகனத்தை அவதானித்து அதன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அந்த வாகனம் அழிக்கப்பட்டது எனவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நலன்புரி நிலையங்களிலிருந்து தப்பியோரை திரும்பி வருமாறு படையினர் அழைப்பு

## வடமராட்சியில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

நலன்புரி நிலையங்களில் இருந்து தப்பிச் சென்றவர்கள் அனைவரையும் சரணடையுமாறு படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் ஒரு சிலர் படையினருக்குத் தெரியாமல் வெளியேறியுள்ளனர். அவர்களை மீளவும் இராணுவத்தினரிடம் சரணடையுமாறும் அவ்வாறு தப்பித்தவர்களை பொதுமக்கள் அண்டக் கூடாது எனவும் நெல்லியடி, கரவெட்டி, உடுப்பிட்டி உள்ளிட்ட வடமராட்சியின் பல பகுதிகளில் படையினர் ஒலிபெருக்கி மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்னியில் இருந்து வந்தவர்கள் தப்பிச் சென்றதால் நலன்புரி முகாம்களில் பாதுகாப்பு மேலும் இறுக்கப்பட்டுள்ளதாகவும் தமது உறவினர்களைக் காணச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ-04)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## செல்வி கதிர்காமத்தம்பி ராகினி

(ஆசிரியை வவு/திருஞானசம்பந்தர் வித்தியாலயம்)

தோற்றம் 23 ★ 04 ★ 1978



மறைவு 31 ★ 03 ★ 2009

கடந்த 31.03.2009 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (30.04.2009) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)

நாகப்பா வளவு, கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
தொ.பே: 0602219637

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## மாணிக்கர் இராசையா (இணுவில் அண்ணை)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு, கரவச்சையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கர் இராசையா (இணுவில் அண்ணை) 27.04.2009 திங்கட்கிழமை அன்று இந்தியாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கர் - நாகம்மா தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் கோணேஸ்வரி (ஜேர்மனி), சுலோசனா (இந்தியா), சிவகுமாரன் (கனடா), திலகவதி (கனடா), விக்னேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசசிங்கம் (ஜேர்மனி), கிருஸ்ணலிங்கம் (இந்தியா), அகிலராணி (கனடா), ராஜேஸ்வரன் (கனடா), செந்தமிழ் செல்வன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் அமரர் இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அமரர் சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அமரர் தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பாலசுப்பிரமணியம், கமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை), இரகுபதி (ஓய்வுபெற்ற படவரைஞர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் நன்னித்தம்பி, குணராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இந்தியாவில் நேற்று (28.04.2009) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.சிவகுமாரன் (கனடா).

# கொடிகாமம் இராமாவில் தென்னந்தோட்டத்திலும் நலன்புரி நிலையம்

யாழ்ப்பாணம், ஏப்.29

கொடிகாமம் இராமாவில் பகுதி தென்னந்தோட்டம் ஒன்றில் நலன்புரிநிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் உயர்மட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இங்கு குடியிருப்பு கொட்டில்களுடன் பாடசாலை வகுப்பறைத்தொகுதிகளும் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,

நாவற்குளி பணம் பொருள் ஆராய்ச்சி நிலைய நலன்புரி நிலையத்தில் அமைக்கப்பட்ட இரண்டாவது தொகுதி நலன்புரி நிலையத்தில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 627 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தங்கியிருந்த குடும்பங்களில் ஒரு தொகுதியினரே அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பணம் பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொகுதி நலன்புரி நிலையத்தில் 247 குடும்பங்களைச் சேர்ந்த 715 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-207)

# மோதல் நிறுத்த முடிவை இந்தியா வரவேற்கிறது

## மேலும் ரூ.100 கோடி நன்கொடை வழங்க முடிவு!

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோதல் நடவடிக்கையை நிறுத்தும் இலங்கை அரசின் தீர்மானம் - மோதலில் சிக்கியுள்ள மக்களின் பாதுகாப்பு குறித்த கவலைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கிய முதல் முக்கிய நடவடிக்கையாகும் என இந்தியா வரவேற்றுள்ளது.

மேலும் மனிதாபிமான உதவியாக 100 கோடி ரூபாவையும் இந்தியா வழங்கியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப்முகர்ஜி விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பு குறித்த கரிசனைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கிய முக்கிய முதல் நடவடிக்கையே இலங்கை அரசின் அறிவிப்பு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் மற்றும் பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ளவர்களின் மனிதாபிமான நிலைக்குத் தீர்வு காண்பதற்காக அவசர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் பிரணாப் முகர்ஜி கேட்டுக்கொண்டுள்ளார்.

மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட அப்பாவி பொதுமக்களுக்கு உதவுவதற்காக நூறு கோடி ரூபா நன்கொடைக்கு இந்திய பிரதமர் மன்மோகன்சிங் அங்கீகாரமளித்துள்ளார். இதனைப் பயன்படுத்தும் வழிவகை குறித்து ஆராயப்படுகின்றது என்றும் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். (அ-சி)

# அகாசி வெள்ளியன்று இலங்கை வருகிறார்

இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து சர்வதேச ரீதியில் கவலைகள் அதிகரித்துள்ள சூழ்நிலையில் இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வரும் அகாஷி இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருக்கும் வேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அதிகாரிகளுடன் பேச்சுகளை நடத்துவதுடன் வவுனியாவில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் முகாம்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அதே காலப்பகுதியில் அகாஷியின் விஜயமும் இடம்பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்று முன்தினம் (27.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் உள்ளே 12ஆம் பக்கத்தில் அறிவிக்கப்பட்டிருப்பது போன்று இன்று (29.04.2009) புதன்கிழமை நடைபெறமாட்டாது. நாளை (30.04.2009) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற ஏற்பாடாகி உள்ளதென அறியத்தருகிறோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
க.பாலமோகன் (மகன்).

## இராசரத்தினம் சவுந்தரம்மா (செல்லம்மா)



ஊரங்குணை, குப்பிளானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சவுந்தரம்மா நேற்று (28.04.2009) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான உலகநாதர் - கற்பகம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் இராசையா, கதிரமலை, அமரர் சுப்பிரமணியம், நாகரத்தினம், நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, சிவதாசன், பொன்மலர், ஞானமலர், இராசமலர், விக்கினதாசன், பாசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தசாமி, திரவியரத்தினம், தங்கவேலு, பாலசுப்பிரமணியம், குகானந்தன், சியாமளா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (30.04.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரங்குணை,
குப்பிளான்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

## கந்தையா நாகம்மா



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகம்மா நேற்று முன்தினம் (27.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி.கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சத்தியசீலன் (முன்னாள் மானிப்பாய் ப.நோ.கூ.ச. எரிபொருள் நிலைய முகாமையாளர்) மற்றும் ராணிக்கமலா (France), விஜயகுமாரி (நவாலி), வசந்தகுமாரி (Germany), தேவிமனோகரி (Germany), சாந்தகுமாரி (நவாலி), ஜெயக்குமாரி (Germany), ஞானசீலன் (France), ரவிசங்கர் (Swiss), கோமதி (France) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராணி (Teacher of International School), ஞானசேகரம், தெய்வேந்திரம் (Germany), வடிவேலு, துரைசிங்கம், ஜெயக்கொடி (நவாலி), ஞானசேகர், எஸ்தர் யசோதா, யோகராணி ஆகியோரின் மாமியாரும் ந.செல்லம்மா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராசா, லீலா ஆகியோரின் மைத்துனியும் கரேஸ்குமார், பேபிஜகிலா, சுரேஸ்குமார், செல்வகுமார், அனுரா, டனுசா (France), பிரதீபன் (Swiss), பிரபாஸ்கரன் (France), பிரபாகரன் (Germany), ஜெயமிலா (Germany), றேனுகா, சுனிற்றா (நவாலி), கோபிகிருஷ்ணன் (Germany), ஜெர்னி, டல்றின், கிறியன்சி, செரோன், டிவோன்கா (உடுவில்), பெனோடிரோஷன் (Germany), கஜன், கபிலினி (Germany), பிரவீன், பிரியந்தி, பிரியங்கா (France), சகானா (Swiss) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் றோகிம், நிஷா (Denmark), சாரா (France), லாவண்யா (நவாலி), றொசான், றொக்சன் (Swiss), பிரவீனா, பிரவீன் (Germany), விதுஷன் (France), கௌசிகா, கௌசிகன் (Germany), சர்மியா (நவாலி) ஆகியோரின் பூட்டியும் மதியழகன், றூபி (Swiss), கிரிதரன், கௌரி, வாசுகி (Canada), துஷ்யந்தன், சதீஸ், ஜானகி (Canada), ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை
April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்

"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service
(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)
எமது நிறுவனத்தில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E-Mail: moorthydigital@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை
ஆரம்ப பிரிவு மாணவனுக்கு வீட்டிற்கு வந்து படிப்பிப்பதற்கு அனுபவமுள்ள ஆசிரியர் தேவை.
தொடர்பு: கொனிக்கா கலர் லாப்,
14, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
# Microsoft Office * English * Accounting
*DTP(Pagemaker,Photoshop,CorelDrow,Typing)
Hardware * Web Developing * Video Editing
*AutoCAD(with Manual Drawing) * VB.net
International Courses...
MCP_Microsoft Certified Professional
MCSE_Microsoft...Systems Engineer
Degree Course * BIT Semester 2,4 & 6,Project
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அவலமும் அபத்த நாடகங்களும்

இலங்கை இனப்பிரச்சினையை ஒட்டி அவ்வப்போது கட்டவிழும் பல்வேறு அபத்த நாடகங்களின் இரண்டு காட்சிகள் நேற்றுமுன்தினம் அரங்கேறியிருக்கின்றன.

ஒன்று - இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை வைத்து அவ்வப்போது அரசியல் சித்துவிளையாட்டுளை நடத்திவரும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அரங்கேற்றிய சாகும்வரை உண்ணாவிரதம் என்ற நாடகம்.

அடுத்தது - முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் மீது விமான மற்றும் கனரக ஆயுதங்களின் பிரயோகம் நிறுத்தப்படுவதான கொழும்பின் அறிவிப்பு.

சாகும்வரையான உண்ணாவிரதத்தை பெரும் எடுப்பு ஆரவாரத்துடன் காலையில் ஆரம்பித்து நண்பகலிலேயே அதனை முடித்துக்கொண்ட கலைஞரின் 'திருவிளையாடல்' கண்டு, தற்போதைய அவலம் தரும் வேதனையில் சிக்கிக் கலங்கி நிற்கும் தமிழினம் அந்தத் துன்பத்துக்கு மத்தியிலும் எள்ளி நகையாடிச் சிரிக்கின்றது.

'உலகத் தமிழினத்தின் தலைவர்' என்று தமக்குத்தாமே மகுடம் சூட்டிக் கொண்ட கலைஞர் கருணாநிதி, தமது தள்ளாத வயதிலும் பதவி ஆசை காரணமாக ஈழத் தமிழரை நட்டாற்றில் கைவிட்டு, 'உலகத் தமிழினத் துரோகி' என்ற நாமத்தைத் தாமே வரித்துக்கொண்டுவிட்ட நிலையில்-

அந்தப் பட்டத்தைத் தவிர்த்துக் கொள்வதற்காக மாயாஜால எத்தனங்களில் எல்லாம் ஈடுபடுகின்றார். அதன் ஓர் அத்தியாயமே உண்ணாவிரத நாடகம் என்ற இந்தப் பூச்சுற்றல் வேலை.

'ஈழத் தமிழருக்கு ஒரே தீர்வு தமிழ் ஈழம்தான். அதை எப்படியும் பெற்றுக்கொடுப்பேன்!' - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சூளுரைத்து, ஒரேநாளில் உலகத் தமிழர்கள் மனதில் எல்லாம் உயர்ந்துவிட்ட நிலைமை கண்டு அதிர்ந்துபோன கலைஞர் கருணாநிதி, அதனால் இனி நடக்கப்போகும் இந்தியப் பொதுத் தேர்தலில் தமக்கு நேரப்போகும் தோல்வி உறுதியான சூழலில், அதைத் தவிர்க்கும் முயற்சியாக அவர் அரங்கேற்றிய நாடகம்தான் இந்த உண்ணாவிரத 'ஸ்டண்ட்' என்பது தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, உலகத் தமிழர்கள் அனைவருக்குமே தெரிந்த விடயம்தான்.

முல்லைத்தீவில் பொதுமக்கள் தங்கியுள்ள பிரதேசங்கள் மீது விமான, கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற அறிவிப்பை விடுத்து, அடுத்த இரண்டு வாரங்களுக்காவது - இந்தியப் பொதுத்தேர்தல் வாக்களிப்பு முடிவடையும் வரையாவது - அதை நடைமுறைப்படுத்துவது என்ற இணக்கத்துக்கு கொழும்பு வந்திருப்பது பற்றிய தகவல் புதுடில்லிக்கும் சென்னைக்கும் ஞாயிறு மாலையே தெரிவிக்கப்பட்டுவிட்டது என்கின்றன கொழும்பின் உள்வீட்டுத் தகவல்கள்.

இதனை அறிந்துகொண்ட தமிழக முதல்வர் உடனடியாக அடுத்தநாள் - திங்கட்கிழமை - காலையில் யுத்த நிறுத்தம் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் நாடகத்தை ஆரம்பித்து, மத்தியானத்துடன் அதை முடித்து வைத்திருக்கின்றார்!

கலைஞர் உட்பட தமிழகத் தலைவர்கள் அனைவரும் வற்புறுத்தியது யுத்தநிறுத்தத்தை. ஆனால் தான் அறிவித்திருப்பது யுத்த நிறுத்தம் அல்ல, கனரக ஆயுதப் பாவனை நிறுத்தம் மட்டுமே என்பதைக் கொழும்பு திட்டவட்டமாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்திய பின்னரும், அதை யுத்த நிறுத்தமாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சிதம்பரம் அர்த்தப்படுத்தி வியாக்கியானம் செய்ய, ஏதோ காலையில் தாம் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தினால் இலங்கையில் யுத்த நிறுத்தம் மத்தியானத்தில் நடைமுறைக்கு வந்துவிட்டது போல காதில் பூச்சுற்றியிருக்கின்றார் தமிழக முதல்வர்.

அடுத்தது - கனரக ஆயுதப் பாவனை நிறுத்தம் பற்றிய கொழும்பின் அறிவிப்பு நாடகம்.

முல்லைத்தீவில் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் இப்போது சிக்குண்டுள்ள பிரதேசத்துக்கு 'பாதுகாப்பு வலயம்' (Safety Zone) என்றும் 'தாக்குதலற்ற பிரதேசம்' (No Fire Zone) என்றும் நாமம் சூட்டப்பட்டது.

ஆனால் இப்பிரதேசங்கள் மீது இனி விமான அல்லது கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட மாட்டாது என்று அறிவித்ததன் மூலம், இதுவரை அப்பிரதேசங்கள் மீது அத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை ஒப்புக்கொள்ளாமலேயே ஒப்புக்கொண்டுவிட்டது இலங்கை அரசு.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகம் சேர் ஜோன் ஹோம்ஸ் சுட்டிக்காட்டியமை போல, இவ்விடயத்தில் இதுபோன்ற பல வாக்குறுதிகள் ஏற்கனவே அளிக்கப்பட்டு, அவை எல்லாம் மீறப்பட்டுவிட்டன. அந்த மாதிரி இல்லாமல் இப்போதைய அறிவிப்பாவது செயலில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும்.

இலங்கையில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பேரவலம் சகிக்கமுடியாத எல்லையையும் தாண்டியுள்ள நிலையில், தமிழகத்துக்கு அப்பாலும் இவ்விவகாரம் பெரும்சீற்ற அலைகளை ஏற்படுத்தி நிற்கின்றது என்பது வெளிப்படை.

இராணுவத் தீர்வில் மூச்சுடன் நிற்கும் கொழும்புக்கு, அதற்காக உதவி, ஒத்தாசை வழங்கி, முண்டு கொடுத்து நிற்கும் பாகிஸ்தான், சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் தவிர்ந்த சர்வதேச உலகு - குறிப்பாக மேற்குலகு - கொழும்பின் இராணுவத் தீர்வுத்திட்ட முயற்சிகளுக்கு எதிராக இராஜதந்திர சீற்றம் கொண்டு நிற்பதும் வெளிப்படையானது.

தனது யுத்தத் தீவிர நடவடிக்கைகள் அந்தத்தை எட்டிக்கொண்டிருப்பதாகக் கருதும் கொழும்பு, அதைப் பூர்த்தி செய்து முடிப்பதற்கான கால அவகாசத்தைத் தான் பெறும் வகையில் மேற்குலகின் சீற்றத்தைக் கட்டுப்படுத்தி வைக்க அவாவுகின்றது.

அதற்கான அவகாசத்தைப் பெறுவதற்கு இந்தக் கனரக ஆயுதப் பாவனை நிறுத்தம் என்ற தந்திரோபாய அறிவிப்பு உதவும் என நினைக்கின்றது கொழும்பு.

இந்த அறிவிப்பாவது செயலில் நடைமுறைப்படுத்தப்படுமா, களத்தில் பேரவலப்படும் ஈழத் தமிழர்களுக்கு அதனால் மீட்சி கிட்டுமா என்பதுதான் உலகம் வாழ் தமிழர்களின் ஏக்கம் நிறைந்த எதிர்பார்ப்பாகும்.

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றிப் பெரும் அவலம்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கவலை

கொழும்பு, ஏப்.29

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேச நலன்புரி முகாம்களுக்கு வருகை தந்துள்ள பெருந்தொகையான அப்பாவிப் பொதுமக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லலுறுவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கவலை வெளியிட்டுள்ளது.

அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அண்மையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வருகை தந்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்குமிட வசதிகளின்றி திறந்த வெளியில் அவதியுறுவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரதிநிதி கோர்டன் பெகொன் தெரிவித்துள்ளார்.

போதியளவு உணவு, குடிதண்ணீர் அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் மருத்துவ வசதி இன்றி பாதிக்கப்பட்ட மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கடும் வெய்யிலில் மர நிழலில் அடைக்கலம் புகுந்திருந்ததனை தாம் நேரில் பார்வையிட்டதாக கோர்டன் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், முதல் தடவையாக குறித்த பொதுமக்கள் யுத்த பீதியிலிருந்து மீண்ட திருப்தியுடன் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நீண்ட காலத்திற்கு உதவிகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (50)

# இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குக் கூடாரங்கள்: அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கியது

கொழும்பு, ஏப்.29

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவியாக 2 ஆயிரத்து 850 கூடாரங்கள் முதல் தொகுதி உதவியாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் டுபாய் களஞ்சியத்திலிருந்து நேற்று முன்தினம் விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான அவசர, மனிதாபிமான நடவடிக்கைகளுக்கென அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மேலதிகமாக 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க அங்கீகரித்துள்ளதாக அந்த அமைப்பின் தூதுவரான அன்டோனியோ குட்டாரிஸ் தெரிவித்தார்.

''அரசாங்கத்தின் தகவலின் படி இடம்பெயர்ந்துள்ள சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள 38 நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.மேலும் அநேகர் வருவர் என எதிர் பார்க்கப்படுகின்றது'' என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''முகாம்களில் காணபப்டும் நெருக்கடி பாரிய பிரச்சினையாக உள்ளது.குறிப்பாக மெனிக் பாம் முகாமில் 4,5 பேர் பாவிக்கக் கூடிய கூடாரங்களை 8 முதல் 10 பேர் வரை பயன்படுத்துகின்றனர். இன்னும் பலர் வெயிலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கூடாரங்கள் எதுவும் இல்லாதிருக்கின்றார்கள். அரசாங்கம் இவர்களுக்காகப் பொது கட்டடங்களைத் தந்து உதவவும், காணிகளை ஒதுக்கவும் இணங்கியுள்ளது'' என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (50)

# 'சீபெற்கோ' உராய்வு நீக்கி எண்ணெய் குடாநாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது

கொழும்பு, ஏப்.29

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 'சீபெற்கோ' உராய்வு நீக்கி எண்ணெய் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள சகல எரிபொருள் விற்பனை நிலையங்களினும் 'சீபெற்கோ' உராய்வு நீக்கிகளை நுகர்வோர் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ள முடியும்

இவ்வாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு வரையில் சுமார் 30 வருடங்க்ள் 'லங்கா' என்ற பெயரில் உராய்வுநீக்கி எண்ணைகளை சந்தைப்படுத்திய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மீண்டும் 'சீபெற்கோ' என்ற பெயரில் உராய்வு நீக்கியை அறிமுகம் செய்துள்ளது.

மலேசியாவிலுள்ள பிரபல நிறுவனமாகிய 'ஹல்ரெக்ஸ் மலேசியா' என்னும் நிறுவனத்தில் இருந்து நேரடியாக தருவிக்கப்படும் உயர்தரம் வாய்ந்த உராய்வு நீக்கி 'சீபெற்கோ' என்ற பெயரில் விற்பனைக்கு வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(203-224)

# இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு சிகிச்சையளிக்க வைத்தியர்களின் எண்ணிக்கை போதாது

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.29

முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா உள்ளிட்ட பிரதேசங்களுக்கு சென்றுள்ள மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு அங்கு வைத்தியர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்பார்த்த எண்ணிக்கையிலும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், அவர்களின் அதிகமானோர் காயமடைந்து மற்றும் நோய்வாய்ப்பட்டுள்ளதாக சங்கத்தின் பிரதிச் செயலாளர் வைத்தியர் உபுல் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண தமது சங்கம் முனைப்புகளை மேற்கொண்டுள்ளதாகவும், உள்ளக மருத்துவ பயிற்சிகளை முடித்து கொண்ட 232 வைத்தியர்களை இந்த வாரத்தில் வடபகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்க உள்ளதாகவும் குணசேகர கூறியுள்ளார்.

இவர்கள் இரண்டு மாதங்கள் வட பகுதியில் தொண்டு அடிப்படையில் சேவையில் ஈடுபடவுள்ளனர். வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் முகாம்களில் பரவக்கூடிய ஆபத்துள்ளதால், முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் எனவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் உபுல் குணசேகர மேலும் கூறியுள்ளார். (50)

# இலங்கை அரசு மோதல் பிரதேசங்களில் தொண்டுப் பணியாளர்களை அனுமதிக்க வேண்டும்

## அமெரிக்க ராஜாங்கப் பேச்சாளர் வலியுறுத்து

வாஷிங்ரன், ஏப்.29

இலங்கை அரசாங்கம் மோதல் பிரதேசங்களில் தொண்டுப் பணியாளர்கள் தமது செயற்பாடுளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்கா இராஜாங்க திணைக்களத்தின் நாளாந்த கூட்டத்தின் போது, அதன் பேச்சாளர் ரொபட் வூட் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மோதல்களின் போது, கனரக ஆயுதங்களை பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டமையை அமெரிக்கா வரவேற்கிறது. எனினும் இந்த அறிவிப்பினை உறுதியாக பின்பற்ற வேண்டும் என்பதையே அமெரிக்கா வலியுறுத்தி நிற்கிறது.'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கம் மோதல் பிரதேசங்களில் ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் தமது செயற்பாடுகளைமேற்கொள்ளதடைவிதித்து வருகிறது.

தொண்டுப் பணியாளர்களை மோதல் பிரதேசங்களில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள அரசாங்கம் அனுமதிக்குமானால், மோதல் பிரதேசங்களில் உள்ள பொது மக்களுக்கு தேவையான மருத்துவ, சுகாதார மற்றும் அத்தியாவசிய உதவிகளை வழங்க கூடியதாக இருக்கும்'' என ரொபர்ட் வூட் தெரிவித்துள்ளார்.

எனவே, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட நிறுவனங்களின் தொண்டுப் பணியாளர்கள், தமது செயற்பாடுகளை சுதந்திரமான முறையில் மோதல் பிரதேசங்களில் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்துவதாகவும் ரொபர்ட் வூட் தெரிவித்துள்ளார்.

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 17 | 30.04.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | மு.இ.09.04 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | காலை 06.51 வரை |
| [illegible] | 07.28 - 08.58 |
| ராகுகாலம்: | 01.28 - 02.58 |

## இடம்பெயர்ந்தோருக்கு நிதி சேகரிப்பு

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவும் நோக்குடன் யாழ். றோட்டறிக் கழகத்தினரால் யாழ். மாவட்டத்திலுள்ள மக்களிடம் நிதி சேகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் இச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கழகத்தின் திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் யாழ்.றோட்டறிக் கழகத்துடன் நகர்மைய றோட்டறக்ட் கழகம், யாழ்ப்பாண றோட்டறக்ட் கழகம், நல்லூர் றோட்டறக்ட் கழகம், சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் ஆகியன இணைந்து செயற்படவுள்ளன. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



எமது பிரதேச செயலகத்தில் முகாமைத் ... தவியாளராக கடமையாற்றும் திவதனன் அவர்களின் அன்புத் தந்தையாரும் கிராம அலுவலராக கடமையாற்றும் ந.தனபாலசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரருமான

### நல்லதம்பி குணபாலசிங்கம்

அவர்கள் 23.04.2009 ஆம் திகதி அகாலமரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்ததுடன் அவர்தம் குடும்பத்தினரின் துயரில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

அனைத்து நலன்புரிச் சங்க
அங்கத்தவர்களும்.

## மரண அறிவித்தல்

### சாம்பசிவம் கணேசலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாம்பசிவம் கணேசலிங்கம் 27.04.2009 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காரைநகரைச் சேர்ந்த S.R.செல்லத்துரை - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தேவரோகினியின் அன்புக் கணவரும் சாந்தி (கனடா), சரவணன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரசித்தின் அன்பு மாமனும் சிவாகரியின் அன்புப் பேரனும் சண்முகலிங்கம், சிவகாமி, மகேஸ்வரி, விக்கினேஸ்வரி, நடேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நளாயினி, சிவசுப்பிரமணியம், முருகமூர்த்தி, சுந்தரகாந்தி, காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் தேவிகாராணி, தேவகல்யாணி, காலஞ்சென்ற தேவபாலன் மற்றும் தேவரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நேற்று (28.04.2009) காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2009) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று மு.ப.11 மணிக்கு கல்கிசை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலி கோயில் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (84867)

திருமதி க.சாம்பசிவம்
(தாய்).

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்.இலக்கிய வட்டம் நடத்தும் தாட்சாயிணியின் தூரப் போகும் நாரைகள் என்ற சிறுகதைத் தொகுப்பின் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கல்வயல் குமாரசுவாமி ஆகியோர் வாழ்த்துரைகளையும் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் வெளியீட்டுரையையும், எழுத்தாளர் தெணியான், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவர். (4-224)

## BIO TEC (உயர்நுட்பம்)

### வேலைக்குப் பெண் பிள்ளைகள் தேவை

*சோடாப் போத்தல் கழுவுதல், சிறுகுறிஞ்சா இலை ஆய்தல்

உடன் நேரில் வரவும்.

131/2, பலாலி வீதி,
திருநெல்வேலி. (84865)

## வெளிவந்துவிட்டது

ஆங்கில மொழிமூலமான பொது இரசாயனம் (GENERAL CHEMISTRY) புதிய பாடத்திட்டம் பகுதி I யாழ்.நகரில் பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

(ஆசிரியர்- S.Thananchayan
B.Sc.Hons, Dip.in.Edu., M.Ed., Dip.in SBM) (84866)

## தவறிவிட்டது

அரியநாயகம் பிரேமதாஸ், கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய மோட்டார் சைக்கிள் புத்தகம் (NPGS 5208), காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்துடன் அல்லது 077 9703032 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (84852)

## தவறிவிட்டது

நீதிமன்ற வீதி, மல்லாகம் என்னும் முகவரியுடைய பஞ்சலிங்கம் சுதர்சினி என்பவரின் கொழும்பிலும், யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்ற மருத்துவ ஆவணங்கள் அடங்கிய பை யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழைக்கு சென்ற சிற்றூர்தியில் பயணம் செய்த பெண்மணி ஒருவரிடம் ஒப்படைத்தேன். அதை தவறுதலாக விட்டுவிட்டு இறங்கிவிட்டேன். எனவே நான் மீண்டும் கொழும்புக்கு கிளினிக் செல்ல வேண்டியுள்ளதால் அதை மேற்குறிப்பிட்ட முகவரியுடனோ அல்லது 077 4593246 என்னும் தொ.பே. இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். (84860)

## தவறிவிட்டது

இல.31, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியுடைய திருமதி த.சண்முகரத்தினம் என்பவரது விசேட அ.அ. (0902030928), தொழில் அ.அட்டை என்பன கைப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் கணபதிப்பிள்ளை



குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் தண்ணீர்தாழ்வை வசிப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை தற்காலிக முகவரியாகவும் கொண்ட வல்லிபுரம் கணபதிப்பிள்ளை நேற்று (28.04.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணாத்தா தம்பதியரின் அன்பு மகனும் தங்கம்மா (அம்மா)வின் அன்புக் கணவரும் தனேஸ்வரி (நேசம் - ஜேர்மனி), சிவானந்தம் (நோர்வே), கனகேஸ்வரி (ஞானம்), கமலேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தருமலிங்கம் (ஜேர்மனி), தனலட்சுமி (நோர்வே), சிவபாதசுந்தரம் (வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி), உதயகுமார் (கனடா) ஆகியோரின் மாமனும் திருக்கலியாணி (ஜேர்மனி), கவிதா (நோர்வே), சகிலா (முகாமைத்துவ பீட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), சுரேக்கா, அஜந்தன் (மாணவன் - யா/இந்துக்கல்லூரி), பிரகாஷ், லக்ஸ்மணி (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.04.2009) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் மாசிவன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

க.சிவபாதசுந்தரம் (பஞ்சு),
இராசவீதி,
மாசுவன் சந்தி, நீர்வேலி. (84859)

தகவல்:
க.சிவபாதசுந்தரம்
(பஞ்சு, மருமகன்).

### சின்னையா பிறேமதாஸ்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பிறேமதாஸ் (17.04.2009) ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சின்னராசா-காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் ரமேஸின் அன்புச் சகோதரரும் ரூபியின் மைத்துனரும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் செல்லம்மா (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் பவித்திரன், பவித்திரா, ருதுஷா, அனோஜன், வினோஜன், மயூரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (30.04.2009) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (84862)

தகவல்:
மு.மனோகரன் (ராஜன்),
மைத்துனர்.

## ஈரவிழி சுரக்கும் கண்ணீரில் நாம் செலுத்தும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
25.07.1976

மறைவு:
30.03.2009

### திருமதி தசக்கிரீபன் சுபாசினி



அன்பிற்கு இலக்கணமாய் அவனியிலே உதித்தவளே
உன் அன்பு முகம் காணாமல் திங்களொன்று
ஒரு யுகமாய் ஆனதம்மா
நீர் பெற்ற உறவுகளைப் பாதியிலே
தவிக்க விட்டு
மாலையிட்ட மன்னவனின்
நெஞ்சமதை பதறவிட்டு
பண்பில்லா காலனவன் உமையழைத்து
சென்றதேனோ?
என் வீட்டு வானத்தில் தோன்றிய முழுமதியே
கண்ணிமைக்கும் நேரத்தில் சட்டென்று
மறைந்ததேன்?
கடலிலே உதித்த முத்து கரைசேரும் என்றிருந்தேன்
எம் கையிற்கு எட்டாமல் மாயக்
காலனுடன் சென்றுவிட்டீர்.
எம் நந்தவனத்தில் மலர்ந்த மலர்
மணம் வீசும் என்றிருந்தேன்.
மணம் வீசும் நேரத்திலே சட்டென்று
வாடியதேன்...

30.03.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு எம் துன்பத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (29.04.2009) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

175, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணியவரை இராஜராஜேஸ்வரி ஆலய திருவிழா 19 வருடங்களின் பின்னர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 29

மாவிட்டபுரம், வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா 19 வருடங்களின் பின்னர் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

1990 ஆம் ஆண்டு யுத்த சூழல் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுக்குப் பின்னர் இந்த ஆலயத்தில் அலங்காரத் திருவிழா இடம்பெறவில்லை.

நித்திய பூசைகள் மட்டுமே இதுவரை காலமும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று அலங்காரத் திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலனைக் கருத்திற் கொண்டு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஆலயத்திற்குச் சென்றுவர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களை காலை 8.30 மணிக்குத் தெல்லிப்பழை தடை முகாமிற்கு வருகை தருமாறும் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (203)

## வலி.தென்மேற்கில் காலங்கடந்த பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.29

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் காலம் கடந்த பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் பிறப்பு மற்றும் இறப்புக்களைப் பதிவு செய்யாதவர்களும், பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பெற்று இதுவரை சமர்ப்பிக்காதவர்களும் நாளை உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளித்துப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (201)

## வருடாந்த ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,ஏப்.29

சர்வதேச லயன்ஸ் கழக 306பீ1, மாவட்ட கழகங்களின் வருடாந்த ஒன்று கூடல் மே மாதம் 16, 17 ஆகிய திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு 306பீ1, மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த ஆண்டில் (2008-2009) கழகங்களின் சேவைகள் செயற்பாடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவோருக்கு ஆளுநர் விருதுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## செட்டிப்புலம் ஐயனார் கோயிலுக்கு நிதியுதவி

வேலணை,ஏப்.29

வேலணை செட்டிப்புலம் ஐயனார் கோயிலுக்கு செட்டிப்புலம் கடற்றொழிலாளர்கள் 46 லட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளனர்.

இரண்டு தினங்கள் கடலில் பிடித்த கடல் அட்டைகளை விற்று அதன் மூலம் கிடைத்த நிதியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-167)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

மண்டுவில், ஏப். 29

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு தபால் கந்தோர் வீதியில் அமைந்துள்ள அன்பொளி கல்வி நிலையத்திலும் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

ஜி.சீ.ஈ உயர்தரத்திற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை அன்பொளி கல்வி நிலையத்திற்கு வழமையான பாடசாலை நேரத்தில் வருகை தருமாறும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (203-59)

**வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து**

# நெல்லியடி ம.வியில் தங்கியுள்ள மாணவரின் கல்விச் செயற்பாடுகளைச் சீர்செய்ய நடவடிக்கை

கரவெட்டி,ஏப்.29

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நெல்லியடி மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைச் சீர்செய்யும் நடவடிக்கைகளை வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு தங்கவைக்கப்பட்டுள்ள 473 குடும்பங்களில் ஆயிரத்து 250 உறுப்பினர்கள் உள்ளனர்.

இவர்களில் தரம் 5 தொடக்கம் உயர்தரம் வரையான மாணவர்களும் ஒரு வயதிற்குட்பட்ட சிறுவர்களும் அடங்குவர். இவர்களின் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடநெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவன உதவியுடன் 40 தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை இங்கு உள்ள ஒரு வயதிற்குக் குறைவடைந்த சிறார்களுக்குரிய பால்மா வகைகள், சத்துணவுகள் போன்றன இதுவரை வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. முகாமில் உள்ளவர்களுக்கு கரவெட்டிப் பிரதேச செயலகம் சமைத்த உணவு, தேநீர் போன்றவற்றை வழங்கி வருகின்றன. (203-70)




# கசிப்பு உற்பத்தி செய்தோருக்கு அறிவுரை; சுயதொழில் உதவியும் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 29

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களை அழைத்து அவர்களுக்கு அறிவுரைகள் கூறியதுடன் சம்பந்தப்பட்டவர்கள் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான உதவிகளையும் இளைஞர் குழு ஒன்று வழங்கியுள்ளது.

இவ்வாறான சம்பவம் ஒன்று சாவற்கட்டு ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி கிராமத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களை ஒன்றுதிரட்டி அப்பகுதிக் கிராமசேவையாளரின் ஒத்துழைப்புடன் அவர்களுக்கு அந்தக் கிராமத்தில் உள்ள இளைஞர்கள் அறிவுரைகள் வழங்கினர்.

இதனையடுத்து கசிப்பு உற்பத்தியைக் கைவிடுவதாக அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கு வங்கிகள்,பிரதேச செயலகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களையும் அந்த இளைஞர்கள் அணுகி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203-9-100)

# மாநகரசபை முன்னெடுக்கும் அபிவிருத்திக்கு தேவையான பங்களிப்புச் செய்யப்படும்

**இலங்கைக்கான அமெரிக்க நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தெரிவிப்பு**

நல்லூர், ஏப். 29

யாழ்.மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான பங்களிப்புகளை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருவோம்.



இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்கயேவிஸ் இணைப்பு விநியோகக் குழுவின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் டபிள்யூ.எச். டபிள்யூ. சொய்சா.

சுப்பிரணிய பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டு பூங்காவை மாநகரசபையிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரச அதிபர் கே.கணேஷ் உரையாற்றுகையில்:-

நகரத்துக்குச் சொந்தமான கலாசார மண்டபத்தைப் புனரமைக்க வேண்டும். அதற்கான உதவிகளைப் பெற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் ஸ்ரீலங்கா அமெரிக்க யேவிஸ் இணைப்பு விநியோகக் குழு 18 பூங்காக்களுக்கு விளையாட்டு உபகரணம் பொருத்த உதவியுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது-என்றார். (20-111)

## எந்திரவியல் டிப்ளோமா விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஏப். 29

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் கட்டுநாயக்காவில் உள்ள எந்திரவியல், நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ(உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான, எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்தவராகவும் 18-25 வயதுக்கு இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை மேற்படி கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் இல.7, கோயில் வீதியில் உள்ள வடமாகாண அலுவலகத்தில் பெற்று ஜூன் 20 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாடநெறி தொடர்பான விவரங்களை கடந்த 24 ஆம் திகதி வர்த்தகமானியிலும், www.iet.edu.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம் என மாவட்ட முகாமையாளர் கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (201)

## காலணிகளுடன் நடமாடுவதை தவிர்க்குமாறு சுலோக அட்டை

கரவெட்டி,ஏப்.29

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் சில வாட்டுகளின் தரைக்கு மாபிள்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவ்வாட்டுக்களின் முன்னரங்கில் காலணிகளுடன் உட்செல்வது தவிர்க்கப்பட்டுள்ளதாக சுலோக அட்டை தொங்கவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நோயாளர்கள், பார்வையாளர்கள் அனைவரும் பாதணிகளை வெளியே வைத்துவிட்டுச் செல்கின்றனர்.

இதனால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆனால் அங்கு கடமைபுரியும் ஊழியர்கள் காலணிகளுடனேயே நடமாடுவதாகவும் கூறப்படுகின்றது. (203-70)

## இளைஞர் சேவை மன்ற விருது வழங்கும் போட்டி

நல்லூர்,ஏப்.29

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நாடகம், குறுநாடகத்திற்கான இளைஞர் விருது வழங்கும் போட்டிகள் விரைவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

போட்டிகளுக்கெனச் சமர்ப்பித்த ஆக்கங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நாடகங்களுக்கான போட்டிகள் தேசிய மட்டத்தில் கொழும்பில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறுநாடகப் போட்டிகள் யாழ்.மாவட்டத்திலும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (203-111)



அமெரிக்க யேவிஸ் இணைப்பு விநியோகக் குழுவினால் யாழ்.மாநகராட்சி மன்றத்தின் சுப்பிரமணியம் பூங்காவில் பொருத்தப்பட்ட விளையாட்டுச் சாதனங்களை யாழ்.மாநகர சபையிடம் கையளிக்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

திட்ட முகாமையாளர் டபிள்யூ. எச்.டபிள்யூ சொய்சா, நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி அமோஸ் ஆகியோர் ஆணையாளர் மு.செ.சரவணபவ சகிதம் பூங்காவிற்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும்-

யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யேவிஸ் இணைப்பு விநியோகக் குழுவின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஆகியோர் நாடாவெட்டி பூங்காவைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு உபகரணத்தில் சிறுவர்கள் விளையாடி மகிழ்வதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் பின்னடைவுகள் பிரபாகரனின் இலட்சியத்தை தளர்வடையச் செய்யும் என்பது சந்தேகமே

## பிரபல ஊடகவியலாளர் அனிதா பிரதாப் சொல்கிறார்



தொடர்ந்து போரிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இன்னும் போதிய மன உறுதி இருக்கிறது என்று இந்தியாவின் பிரபல ஊடகவியலாளர் அனிதா பிரதாப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'த வீக்' ஆங்கில வார இதழுக்கு அவர் எழுதிய கட்டுரையில் அவர் கூறி யிருப்பதாவது :-

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பலருக்கும் பலவகையில் தோற்றம் அளிக்கிறார். அவரைப் போற்றுவதும், தூற்றுவதும் அவரவரின் கொள்கை நிலையைப் பொறுத்தது.

பிரபாகரனின் சிந்தனையில் என்ன ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் அவர் அச்சம் அடையவோ, விரக்தி அடையவோ இல்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

சாவைக் கண்டு அவர் அஞ்சவில்லை. 17 வயதிலிருந்தே அவர் சாவுடன் உறவாடி வருகிறார். அவர் சிறிதும் தளர்ச்சி அடையாத போர் வீரர். அனைத்து நடைமுறை விடயங்களில் இருந்தும் தத்துவஞானி போல விலகி நிற்பவர்.

எனினும், தனது கொள்கைத் திட்டக் குறிக்கோளான தமிழ் ஈழத்தை அடைவதில், ஊசலாட்டம் அற்ற ஈடுபாட்டை வெளிப்படுத்தி வருபவர்.

இந்தப் போர்ப் பின்னடைவுகள், இலட்சியத்தின் மீதான அவரின் நம்பிக்கையை அல்லது உறுதிப்பாட்டை தளர்வடையச் செய்துவிடுமோ, சீர்குலைத்துவிடுமோ, அழித்துவிடுமோ என்பது எனக்கு ஐயம்தான். அவர் தனது மக்களின் விடுதலைக்காகவே போராடி வருகிறார் என்பதில் அவர் மனத்தில் மிகவும் தெளிவாக இருக்கிறார். அந்தக் கோட்பாட்டுக்காகவே அவர் வாழ்ந்து வருகிறார். அந்தக் கோட்பாட்டுக்காகவே அவர் போராடி வருகிறார். அந்தக் கோட்பாட்டுக்காகவே அவர் சாவதற்கும் தயாராக இருக்கிறார்.

வெற்றிகளும் தோல்விகளும் வரும், போகும். பிரதேசங்களை இழப்பதும், வெல்வதும் உண்டு. போராளிகள் இறப்பார்கள், தோழர்கள் துரோகம் செய்வார்கள். ஆனால் அவரின் இறுதி மூச்சு வரையில், தமிழ் ஈழத்துக்கே அவர் உண்மையானவராக இருப்பார்.

அமெரிக்கா மீது செப்ரெம்பர் 11 இல் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, ஜோர்ஜ் புஷ் அறிவித்த பயங்கரவாதத்துக்கு எதிரான போர்க் கொள்கையால், உலகம் முழுவதும் பயங்கரவாதத்தை சிறிதும் சகித்துக் கொள்ளாத ஒரு சூழ்நிலைமை உருவாக்கப்பட்டு இருக்கிறது.

பயங்கரவாத அமைப்புகளுக்கும் தேசிய விடுதலைக் குழுக்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை இது மங்கச் செய்து விட்டது.

உலகில் அரசு பயங்கரவாதத்தை எதிர்கொள்ளாத விடுதலைப் படையோ, பதிலுக்குத் தங்களது தேசியவாதக் குறிக்கோள்களை அடைவதற்காக பயங்கரவாதத்தை ஒரு நடைமுறைத் தந்திரமாகப் பின்பற்றாத விடுதலைப் படையோ எதுவும் இல்லை. தான் போற்றி வணங்கும் மாவீரர்களாகப் பிரபாகரன் கருதும் நேதாஜி சுபாஷ் சந்திர போசும், பகத் சிங்கும் இந்தியாவை ஆண்ட இங்கிலாந்து ஆட்சியாளர்களால் பயங்கரவாதிகள் என்று அறிவிக்கப்பட்டவர்கள்தான்.

அண்மைக் காலம் வரையில் நெல்சன் மண்டேலாவும் கூட பயங்கரவாதிகளின் பட்டியலில்தான் வைக்கப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் 30 நாடுகளில் பயங்கரவாத அமைப்பு எனத் தடை செய்யப்பட்டுள்ளது. இது விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கான உலகளாவிய ஒப்புதலை சிறிலங்கா அரசுக்கு வழங்கியிருக்கிறது. இவ்வாறு செய்ததன் மூலம், வரலாற்றில் பெரும் பேரழிவு ஆபத்து ஏற்பட உலகச் சமுதாயம் அனுமதித்து விட்டது.

### சொந்த மக்கள்

இது விடுதலைப் புலிகளுக்கு நேர்ந்த துன்பம் அல்ல, தமிழர்களுக்கு நேர்ந்த துன்பம்.

ஓராண்டுக்கும் மேலாக, அப்பாவிகளான தனது சொந்த மக்கள் மீதே குண்டு வீசித் தாக்கி வரும் அரசு உலகில் வேறு எங்குமே இருக்காது. இதுபோன்ற குற்றத்துக்கு இஸ்ரேலிய, அமெரிக்க, நேட்டோ படைகள் கூட உள்ளான தில்லை.

மோதல் அற்ற பாதுகாப்புப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட பகுதியே, தாக்குதல் நடத்தும் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்களுக்குப் பெரிய சாவுக் களமாக மாறி வருகிறது.

இரண்டரை இலட்சம் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பல்லாயிரக் கணக்கானோர் அகதிகள் முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர், முடமாக்கப்பட்டுள்ளனர்.

பிரபாகரனை ஆதரித்ததால் தமிழ் மக்களுக்கு இந்தக் கதி வேண்டியதுதான் என்று சொல்பவர்கள் இதயமற்றவர்கள், குருடாகிப் போனவர்கள். பிரபாகரனை ஆதரிக்கிறவர்களும் இருக்கிறார்கள், ஆதரிக் காதவர்களும் இருக்கிறார்கள். எப்படி இருந்தாலும், அவர் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய சக்தி அவர்களுக்கு இல்லை.

இந்நிலையில் சாதாரண அப்பாவி மக்களைத் தண்டிப்பதை நியாயப்படுத்த முடியுமா? ஈராக்கில் புஷ் செய்த பாவத் துக்காக அமெரிக்க மக்களை கொல்வது, அவர்கள் புஷ்சை இருமுறை தேர்ந்தெடுத்த வர்கள் என்ற போதிலும், நியாயம் ஆகுமா? சிறிலங்கா படைகள் விடுதலைப் புலிகளை அழிக்க முயல்வதில் தவறு காண முடியாது. ஆனால், அந்த நடைமுறையில், தமிழ் மக்களையும் அவர்களது தாயகத்தையும் சிறிலங்கா அரசு அழிப்பதை நியாயப்படுத்தவோ மன்னிக்கவோ முடியாது.

ஆனால் இது பிரபாகரனை வலுப்படுத்தவே செய்யும். விடுதலைப் புலிகள் போரை வரவேற்கிறார்கள் என்பதை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

ஏனெனில் அது அவர்களின் அணிகளை பெருகச் செய்கிறது, குறிக்கோள் மீது அவர்களின் உறுதிப்பாட்டை மீண்டும் வலுப்படுத்துகிறது, தனிநாடு கோரிக்கைக்கு இன்னும் உணர்ச்சிமயமான ஆதரவை உருவாக்குகிறது. நான் பார்த்த முந்தைய போர்களில் (அப்போது செய்தியாளர்கள் போர்ப்பகுதிக்குள் செல்ல முடிந்தது) இருந்து, விடுதலைப் புலி போராளிகள் போரிடுவதை விரும்புகிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடிந்தது.

சமாதான காலத்தில் விடுதலைப் புலி கெரில்லாக்கள் கட்டுப்பாட்டுடனும், நிதானத்துடனும் இருக்கிறார்கள். போர்க் காலத்தில் முற்றிலும் மாறுபட்டு அதிக உணர்ச்சியும் மகிழ்ச்சியும் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் கதை முடிந்து விட்டது என்று இதற்கு முன்பும் பலமுறை கூறப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் பிரபாகரன் பலமுறை 'கொல்லப்பட்டிருக்கிறார்' அல்லது 'கொல்லப்படும் நிலையை நெருங்கியிருக்கிறார்.' அவரது பதுங்கு குழியைப் படையினர் எப்போதேனும் நெருங்கும் எனில், பிரபாகரன் தனது சயனைட் குப்பியைக் கடித்து விழுங்கி காவிய நாயகன் நிலையை அடைந்து விடுவார்.

''தந்திரமான மதிப்பீடுகள் இல்லாத நிலையில், இதுதான் முடிவு ஆட்டம் என்றும், இதுதான் பிரபாகரனின் கடைசி நிலை என்றும் சிறிலங்கா அரசு கூறி வருவதையே பத்திரிகையாளர்களும் திருப்பிச் சொல்லி வருகிறார்கள்.

கடந்த கால அனுபவத்தை வைத்து மதிப்பிடும்போது, இதை நான் சந்தேகிக்கிறேன். பிரபாகரனின் பிடியில் இருந்து கடைசித் துண்டு நிலத்தையும் சிறிலங்கா படை கைப்பற்றிவிடும் என்பது உறுதி. ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கமே முடிந்து விட்டது என அதற்குப் பொருளாகாது. அவர்கள் தாங்கள் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ள, யாரும் எதிர்பாராத நிலையில் தாக்கும் கொரில்லா போர் முறைக்குத் திரும்புவார்கள். ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றுவது வேறு என்பதையும், அதைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பல்வேறு சிக்கல்களை எழுப்பும் என்பதையும் ஏற்கெனவே பல்வேறு படைகள் உணர்ந்திருக்கின்றன.

பிரபாகரன் இதற்கு முன்பும் போர்களில் தோற்றிருக்கிறார். சொந்தப் படை, காவல்துறை, நீதிமன்றங்கள், வரி விதிப்பு முறை முதலியவற்றைக் கடந்த காலத்தில் ஒருமுறை அல்ல பலமுறை அவர் உருவாக்கி இருக்கிறார் அவை எல்லாம் அழித்து ஒழிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் மீண்டும் அவர் தொடங்கி உருவாக்கி இருக்கிறார்.

54 வயதாகும் பிரபாகரனிடம், மீண்டும் தொடங்குவதற்கும், மேலும் 20 ஆண்டுக் காலம் தொடர்வதற்கும் இன்னும் போதிய மன உறுதி இருக்கிறது. இன்று பிரபாகரனின் நிலைமை ஆபத்துக்கும் அச்சத்துக்கும் உரியதாகத் தோன்றுகிறது. ஆனால் நல்வாய்ப்புச் சக்கரம் அப்படியே நிற்பதில்லை-என்று அவர் கூறியுள்ளார்.


ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!
நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும்

யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக் களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கி லாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர், நைஸ்
லக்கிலாண்ட் சோட் டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

Manufactured By:
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567

உ
சிவமயம்

வேண்டுகோள்

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்

சைவபரிபாலன சபையின் நூலகத்தில் இருந்த பல நூல்கள் இடப்பெயர்வுக் காலத்தில் காணாமல் போய் விட்டன. சபையினால் வெளியிடப்பெற்ற வெள்ளி விழா மலர், பொன்விழா மலர், வைரவிழா மலர்களும், இந்துசாதனம் மலர்களும் இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். இம் மலர்களை வைத்திருக்கும் சைவ அன்பர்களை அவற்றை எமது நூலகத்திற்கு தந்துதவுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

சபாபதிநாவலர், அம்பலவாணநாவலர் ஆகியோரின் நூல்களைத் திருவாவடுதுறை ஆதீனம் பதிப்பித்து வெளியிட திட்டமிட்டுள்ளது. இவர்களின் நூல்களை வைத்திருக்கும் அன்பர்களும் இவர்களினால் வெளியிடப்பட்ட நூல்களின் பட்டியலை வைத்திருக்கும் அன்பர்களும் அவற்றைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தரப்படும் நூல்களையும், மலர்களையும் பிரதி எடுத்த (Photocopy) பின்னர் பாதிப்பு எதுவுமின்றி உரியவர்களிடம் கையளிப்போம் என்று உறுதி கூறுகின்றோம்.

66, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 222 7678

சைவபரிபாலன சபை

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி பாமினி-தம்புச்சாமி தம்பதியினரின் செல்வப்புதல்வி ஹாசினி தனது முதலாவது பிறந்த நாளை இன்று (29.04.2009) புதன்கிழமை அமெரிக்காவில் தமது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

ஹாசினிக் குட்டியை

அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, அக்காமார், அண்ணாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார் மற்றும் உறவினர்கள் பல்கலை அறிவும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.




தகவல்:
திரு.திருமதி.சிவராஜா
இல 9, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சலில் இருந்து உறவுகளைப் பாதுகாக்க உங்கள் சூழலைத் தூய்மையாகப் பேணுங்கள்

*டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு வாரத்தை (27.04.2009) தொடக்கம் 02.05.2009 வரை) முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.*

இலங்கையில் பல மாவட்டங்களிலும் டெங்குக் காய்ச்சல் கடந்த ஆண்டுகளை விட அதிக எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ளதுடன் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து டெங்கு நோயினைப் பரப்பக் கூடிய நுளம்புகள் அதிகளவில் பெருகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் யாழ்ப்பாணத்திலும் இந்நோய் பரவக்கூடிய ஆபத்து நிலை அதிகரித்துள்ளது. எனவே டெங்குக் காய்ச்சல் தொடர்பில் மக்கள் அனைவரும் விழிப்புணர்வோடு செயற்பட்டு தமது சுற்றாடலில் டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்புகள் பெருக்கமடையாது பாதுகாத்துக் கொள்வதன் மூலம் தம்மையும் தமது குடும்பத்தவரையும், அயலவர்களையும் டெங்குக் காய்ச்சலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். அத்துடன் டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டால் உரிய முறையில் நோயாளியைப் பாதுகாப்பதால் ஏனையோருக்கு நோய் ஏற்படாது தடுக்க முடியும் என்பதுடன் நோயாளிக்கு சரியான பராமரிப்பை வழங்குவதன் மூலம் உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் ஏற்படாது தவிர்த்துக் கொள்ளவும் முடியும்.

மக்களனைவரும் தமது வீட்டுச் சுற்றாடலிலும், சமூகமட்ட அமைப்புக்களான சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் தமது பகுதியிலுள்ள பொது இடங்களிலும், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் தமது வேலைத் தளங்களிலும், பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை மற்றும் பாடசாலைச் சுற்றயல் பிரதேசங்களிலும் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருக்கமடையக்கூடிய சிறிய நீர் தேங்கக்கூடிய தகரப் பேணிகள், இளநீர்க் கோம்பை, சிரட்டைகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள் மற்றும் ஏனைய கொள்கலன்களை எரித்தோ அல்லது புதைத்தோ அகற்றுவதுடன் பூச்சாடிகளில் நீர் தேங்கி நிற்காதவாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். மழை நீர் தேங்கி நிற்கக்கூடிய பீலிகள், வாய்க்கால்களில் நீர் தடையின்றி வடிந்தோடுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதோடு ரயர்கள், மரப்பொந்துகள் போன்றவற்றிலும் நீர் தேங்கி நிற்காதவாறு மண்ணிட்டு நிரப்புதல் வேண்டும்.

டெங்கு நோய் நுளம்புகளால் பரப்பப்படும் ஒரு தொற்று நோய். ஒவ்வொருவரும் தத்தமது சுற்றாடலினை நுளம்புகள் பெருகாதவாறு துப்புரவாக வைத்துக் கொள்வதன் மூலம் தங்களையும் 'தமது அன்புக்குரியவர்களையும் ஆபத்தான டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

தேசிய ரீதியில் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதியிலிருந்து மே மாதம் 2ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் மக்களனைவரும், பொது நிறுவனங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டங்களையும், சுற்றாடல் சிரமதான வேலைத்திட்டங்களையும் சுகாதாரத் திணைக்கள களப்பணியாளர்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.'

காய்ச்சல் சடுதியாகக் குறைவடைந்து விட்டாலும் ஏற்படக்கூடிய கீழ்க்காணும் அறிகுறிகள் அபாயகரமானவை.

*தோலின் கீழ் சிவப்பு நிறமான புள்ளிகள் அல்லது தழும்புகள்

*மூக்கிலிருந்து அல்லது முரசிலிருந்து இரத்தக் கசிவு

*தொடர்ச்சியான வாந்தி

*வாந்தியுடன் இரத்தம் வெளியேறுதல்

*கறுப்பு நிறமாக மலங்கழித்தல்

*சோம்பல்

*எரிச்சலடைதல்

*கடுமையான அடிவயிற்றுவலி

*தோல் குளிர்ந்து வெளிறிக் காணப்படுதல்

*மூச்செடுப்பதில் சிரமம்

டெங்கு நோயாளியென இனங்காணப்பட்ட ஒருவருக்கு காய்ச்சல் விட்டதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் ஏதாவது ஏற்பட்டால் நோயாளியை உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள்.

''எமது சுற்றாடலில் நுளம்புகள் பெருகாதவாறு பாதுகாப்பானதாக வைத்துக் கொள்வதன் மூலம் டெங்கு நோய் எமக்கு ஏற்படாது பாதுகாத்திடுவோம்''.

ஒருவருக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டால் அவரிலிருந்து ஏனையோருக்குப் பரவாது பாதுகாத்துக் கொள்வதற்கும், டெங்கு நோய் ஏற்பட்டவருக்கு உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் ஏற்படாதவாறு பராமரிப்பதற்கான முறைகளை அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டால் கட்டாயமாகச் செய்யவேண்டியவை

*நோய் ஏற்பட்டால் படுக்கையில் போதுமான ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும்.

*அதிகளவு நீராகாரம் வழங்கப்பட வேண்டும்.(சுத்தமான குடிதண்ணீர், சோற்றுக் கஞ்சி, சூப், பழரசங்கள், இளநீர் போன்றவை )

*ஒரு நாளைக்கு 4 தடவைக்கு மேற்படாமல் 6 மணித்தியாலங்களிற்கொரு முறை வைத்தியரின் ஆலோசனையின் படி உரிய அளவில் பரசிற்றமோல் வழங்கப்பட வேண்டும்

*காய்ச்சல் அதிகரிக்கும் போது உடல் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஈரத்துணியினால் ஒத்தடம் கொடுக்கப்பட வேண்டும்.

*பகல், இரவு, அனைத்து வேளைகளிலும் கட்டிலில் ஓய்வெடுக்கும் போது நோயாளியை நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு வலையைப் பாவிக்க வேண்டும்.

டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டால் கட்டாயமாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

*அஸ்பிரின் அல்லது அஸ்பிரின் அடங்கிய மருந்து வகைகள் கொடுக்கக் கூடாது.

*கறுப்பு நிறமான மற்றும் சிவப்பு நிறமான பானங்கள், உணவு வகைகள் கொடுக்கக்கூடாது. (கோப்பி, கொக்க கோலா போன்றவை).

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# ஸ்ரீலங்கா அரசு போர்நிறுத்தத்தை நிராகரிப்பது பெரும் மனிதப் பேரவலத்திற்கு வழிவகுக்கும்

## பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் அறிக்கை

கொழும்பு,ஏப்.29

ஸ்ரீலங்கா அரசு போர் நிறுத்தத்தை நிராகரிப்பது பெரும் மனிதப் பேரவலத்திற்கு வழி வகுக்கும்.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் விரேந்திராசர்மா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப் பட்சமான போர் நிறுத்த அறிக்கை வெளிவந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஸ்ரீலங்கா அரசு இறுதிக்கட்டத் தாக்குதலை நடத்தக் கூடும் என்று நம்பத்தகுந்த தகவல் பிரித்தானியாவின் அனைத்துக் கட்சித் தமிழர்களுக்கான நாடாளுமன்றக் குழுவுக்குக் கிடைத்துள்ளது.

பாதுகாப்பு வலயம் மீது கடல், வான், தரை வழியான தாக்குதலை மேற்கொள்ளக் கூடும்.

ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கும் பாதுகாப்புப் பகுதிமீது மேற்கொள்ளப்படும் இத்தாக்குதலால் 10 ஆயிரம் பேர்வரை கொல்லப்படுவதற்கு வழி வகுக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் காலவரையற்ற ஒரு தலைப் பட்சமான போர் நிறுத்தத்தை நாங்கள் வரவேற்கின்றோம்.

சர்வதேச நாடுகள், மனித உரிமை அமைப்புகளின் கோரிக்கை போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுதான்.

ஸ்ரீலங்கா அரசு இதனை நிராகரிப்பது மனிதப் பேரவலம் ஏற்படுவதற்கு வழி வகுக்கும் - என்றுள்ளது. (203)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.29

ஆனைக்கோட்டை உயரப்புலம் உந்துங்க ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (9-236)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.29

பெரியவிளான் வட ஷேரியம்பதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(9-236)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் உள்ள நகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி போடப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை ஜே/78, இராசாவின் தோட்டத்திலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை 89/1, கோயில் வீதியிலும் தடுப்பூசிகள் போடப்படவுள்ளன. நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை ஜே/78 றக்கா வீதியிலும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 மணிவரை ஸ்ரான்லி வீதி புகையிரத நிலைய விடுதியிலும் தடுப்பூசிகள் போடப்படவுள்ளன. (203-9)

# 60 வீதமான மக்கள் அரசுக்கு வாக்களித்தனர் என்பது தவறு

## 39.4 வீதமே என்கிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

கொழும்பு, ஏப். 29

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கு 39.4 வீதமானவர்களே வாக்களித்துள்ளனர் என்றும் 60 வீதமானவர்கள் வாக்களித்துள்ளனர் என்பது பொய்யான தகவல் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஐ.தே.க. எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றியவை வருமாறு:-

மேல்மாகாண சபைத் தேர்தலில் எமக்கு வாக்களித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்தேர்தலில் மஹிந்த சிந்தனையை ஏற்று 60 வீதமான மக்கள் வாக்களித்துள்ளனர் என்று அரசு கூறுகின்றது. இது பிழையான கணிப்பீடு.

உண்மையில் 39.4 வீதமான மக்களே அரசுக்கு வாக்களித்திருக்கின்றனர். மீதி 60 வீதத்தினர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அல்லது வேறு கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அல்லது வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் வேலைத்திட்டத்தை மக்கள் எந்தளவு ஏற்றுள்ளனர் என்பது புரிகின்றது. ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை மக்கள் ஏற்றிருந்தால் அரசுக்கான வாக்குகள் இன்னும் அதிகரித்திருக்கும்.

இந்த 39.4 வீத வாக்குகள் கூட அரசு மிகவும் சிரமப்பட்டு வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டுத்தான் பெற்றது. இத்தேர்தலில் அரசின் உச்ச அதிகாரம், அரச சொத்துகள் மற்றும் அரச ஊடகங்கள் போன்றவை அரசால் முற்றுமுழுதாகப் பயன்படுத்தப்பட்டன.

இத்தேர்தலில் அரசுக்குப் பயம் இருந்ததால்தான் அரசு இவ்வாறு செய்தது. வெற்றி மீது நம்பிக்கை இருந்திருந்தால் அரசு 17ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் கீழுள்ள சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்திருக்கும்.

இது தொடர்பாக நாம் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அரசு கேட்கவில்லை. அரசின் அதிகாரம் குறைந்துவிடும் என்ற பயத்தால் அரசு இதைச் செய்யவில்லை.


இதனால் தேர்தல் காலத்தில் கொலை மற்றும் தாக்குதல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இவை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை - என்றார். (சி)



பிறின்ஸ் நிறுவனத்தினரால் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்ட 'கேக்' கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள்.

டாக்டர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், கண்காட்சியில் வைக்கப்பட்ட 'கேக்' வடிவங்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர் பாரம்பரியத்தில் இந்துக்களின் வழிபாட்டு முறைகளில் தற்போது சில மாற்றங்கள் வந்த போதும், அன்றைய கால வழிபாட்டு முறைகளான கல்உருவம் மற்றும் சூலம் என்பனவற்றை வழிபடும் முறையானது இன்றும் தொடர்வதையே இப்படம் நிரூபிக்கின்றது. இது ஈவினை கிழக்கு,கலையரசி கிராமத்தில் உள்ள கிராமிய ஆலயம் ஒன்றில் எடுக்கப்பட்ட படம் ஆகும்.
(படமும் ,தகவலும்:- கலைஞன்)

தொகுப்பு: ஔண்யன்

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்




எப்போதுமே அதிசயங்களுக்கும்,ஆச்சரியங்களுக்கும் உலகினில் குறையே இருந்தது இல்லை. அப்படிப்பட்ட ஆச்சரியங்களில் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள். சாதாரணமான சிறு பென்சிலையே சுமையாக நினைக்கும் இன்றைய காலகட்டத்தில் 76 அடி நீளமான, பிரமாண்டமான பென்சிலை நியூயோர்க்கில் அமைத்துள்ளார்கள். 'சின்மோய்ஸ்' என்ற சிறுவனின் பிறந்ததினப்பரிசாகவே இந்த இராட்சதப்பென்சில் உருவாக்கப்பட்டது. இதனைச் செய்து முடிக்க இரண்டு வாரங்கள் தேவைப்பட்டது. உலகிலேயே மிகப்பெரிய பென்சில் என்ற கின்னஸ் சாதனையையும் இந்தப் பென்சில் படைத்துள்ளது.



நன்றி: நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

படத்தில் இருப்பது பிரித்தானிய காலக் கட்டடம் ஒன்றின் முகப்பாகும். யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து,எஞ்சியிருக்கும் இந்த முகப்பு,ஒரு காலகட்ட யாழ்ப்பாணக் கட்டடக்கலைப் போக்கினதும், பொருளாதார பண்பாட்டுச் சிறப்பினதும் சுட்டியாகும். இந்த முகப்பு ஐரோப்பிய கட்டடக் கலையில், அக்காலத்தில் நிலவிய, 'பரோக்கிய' பாணியை அடியொற்றிக் காணப்படுகின்றது. இது யாழ்ப்பாணக் கட்டடக்கலையினுள் ஊடாடிய மேற்கத்தேயப் பாணிகளில் ஒன்றாக விளங்குகிறது. - பாலன் குட்டி



வரலாற்றுப் புகழ்மிக்க யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் உள்ள இளைப்பாற்று மடத்தின் சிதைவடைந்த தோற்றமே இது. முன்னர் இங்கு வரும் மக்கள் இளைப்பாறிச் செல்வதற்கு ஏற்ற வகையில் சிறப்பான மடமாக இது இருந்ததாகவும் கடந்த ஆண்டு ஏற்பட்ட புயலைச் சாட்டாக வைத்து திருடர்கள் கைவரிசை காட்டியதன் விளைவே, மடம் அழியும் நிலையில் இருப்பதற்குக் காரணமாகும். எம்மை அழிக்க நாமே போதும் வேறெவரும் தேவையில்லை என்பதற்கு இதுவே சாட்சி ஆகின்றது.
(படமும், தகவலும்:- கலைஞன்)



மானிப்பாய் பகுதியில் ஓர் அதிசயத் தென்னங்கன்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. வழமையாக ஒரு விதையில் இருந்து ஒரு தென்னங்கன்று மாத்திரமே வெளிவரும். ஆனால் ஒரு விதையில் ஐந்து கன்றுகள் முளைத்துள்ளன. அத்தோடு இத் தென்னங்கன்றுகளில் இப்போதே குரும்பைகளும் தோன்றத் தொடங்கியுள்ளன. ஏறக்குறைய 32 குரும்பைகளோடு கொத்தும் குலையுமாகக் காட்சியளிக்கும் இந்த அதிசய தென்னங்கன்றுகள், மானிப்பாயைச் சேர்ந்த பசுமைப் புரட்சியாளரான வைத்திலிங்கம் செகராசசிங்கம் என்பவரது வீட்டிலேயே உள்ளன. பசுமைப் புரட்சியாளரையும், அவர் வீட்டில் வளர்ந்த அதிசய தென்னங்கன்றுகளையும். படத்தில் காணலாம். (படமும், தகவலும் : ரமேஷ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே சாய்ந்துவிடாதே!



மரம் சாய்ந்து போனால் அதனை நட்டுவிடலாம்;
மனம் சாய்ந்து பேனால் என்ன செய்யலாம்?....

என்ற கருத்துப்பட ஒரு பாடல் இருக்கிறது. நமது மனம் மிக முக்கியமானது. மனம் சுகமாக இருந்தால் உடலும் சுகமாக இருக்கும். எதையும் தாங்கும் இதயத்தோடு மனதை விட்டுவிடாமல், துணிவே துணை என்று வாழும் வல்லமை படைத்தோர் தான் இன்றைய சூழ்நிலையில் ஒருவாறு வாழக்கூடியதாக இருக்கிறது.

இன்று அன்றாடம் நிகழும் நிகழ்சிகளைக்கண்டு அநேக மக்கள் மனக் குழப்பங்களுக்கு உள்ளாகுகின்றனர். தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், உறவினர்களினதும், அன்பிற்குரிய நண்பர்களினதும் திடீர் இழப்புக்கள் மனதை மிகவும் பாதித்து விடுகின்றன. இதனால் மனச்சோர்வு (DEPRESSION), பதகளிப்பு (ANXIETY) கழிவிரக்கம் (GRIEF) போன்ற உளவியல் பிரச்சினைகள் மனதை உலுக்கத் தொடங்குகின்றன. நித்திரைக் குழப்பங்களும் நடத்தை மாற்றங்களும் ஏற்படுகின்றன. குடும்பத்தவர்களும் மற்றவர்களும் "இவர் என்ன இப்படி இருக்கிறாரே!" என்று பேசத்தொடங்குவர். மனச்சோர்வு இருக்கும் போது ஒருவர் சோகத்தில் ஆழ்ந்திருப்பார், இலகுவில் அழுவார்,யோசனை, விரக்தி தாழ்வுமனப்பான்மை, சந்தோசமின்மை, வெறுப்பு, உதவியற்றநிலை, தான் பிரயோசனமற்றவன் என்ற பல நிலைகளில் மூழ்கியிருப்பார்.

பதகளிப்பு உள்ள ஒருவர் பயம், பதற்றம், ஏக்கம், கவலைகளைப் புணர்வு, திடீர் சத்தங்களுக்கு இலகுவாகத் திடுக்கிறுதல், நித்திரையின்மை, பயங்கரக்கனவுகள், மனதை வேலையில் ஒருநிலைப்டுத்த முடியாமை போன்ற உளவியல் அறிகுறிகளையும், படபடப்பு, விரைவான சுவாசம், நெஞ்சிறுதலால் வாய் உலர்தல், விழுங்குவதில் கஷ்டம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், பாலியல் இடர்பாடுகள் போன்ற உடலியல் குணங்குறிகளையும் வெளிக்காட்டுவார்.

இவற்றையெல்லாம் வெளி ஆள்கள் கவனித்தால் வெட்கம் அல்லது களங்கம் (STIEMA) என நினைத்து குடும்பத்தவர் மறைக்கத் தொடங்குவர். "எங்கடை பிள்ளைக்கு ஒன்றுமில்லை அவர் வழமையாகவே அப்படித்தான்" என்று சொல்லி மழுப்பிவிடுவார்கள். காலப்போக்கில் மனத்தாக்கத் திற்குள்ளாகியவர், "மனப்பிளவைநோய்" (SCHIZOP HRENIA) போன்ற பாரிய உளநோய்க்கு உள்ளாகிவிடுவார்.

ஆரம்பத்திலேயே வேண்டிய கவனம் செலுத்தி சிகிச்சை பெற்றால் இந் நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம். முழங்காலில் வலி ஏற்பட்டால், நாம் உடனே வைத்தியரை நாடுகிறோம். ஆனால், அதே அளவு கவனத்தை எமது சிந்தனையில், உணர்வில், பிழையோ மாற்றமோ ஏற்படும்போது நாம் செலுத்துவதில்லை. மூளையும் உடலின் ஓர் உறுப்புத்தான் என்பதையும், அதற்கும் சிகிச்சைகள் தேவைப்படுகின்றன என்பதையும் நாம் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

மனப்பிரச்சினைகளை உணரும் போதே இரகசியம் பேணக்கூடிய, புரிந்துணர்வுள்ள தகுந்த நண்பரிடமோ உறவினரிடமோ மனம் விட்டுப் பேசி கருத்துப் பகிர்ந்து கொள்ளலாம், அல்லது ஒரு வைத்தியரை நாடினால் அவர் உரிய சிகிச்சை பெறத் தக்க இடத்துக்கு வழிப்படுத்துவர். அல்லது தகுந்த உளவளத் துணையாளரோடு (COUNSELLOR) பேசிப்பார்க்கலாம். அவர் சந்திப்புக்கான ஒரு தினத்தையும் நேரத்தையும் தருவார். குறிப்பிட்ட தினத்தன்று அவர் உதவி நாடி வருபவர் சொல்வதை ஒரு தனி இடத்தில் முழுக் கவனத்துடனும் ஆதரவுடனும் கேட்பார் மேலதிக அமர்வுகள் தேவைப்படின் அதற்கு வேண்டியவற்றைச் செய்து மேற்கொண்டு உதவக்கூடிய வழிமுறைகளை அவர் முன்னெடுப்பார்.

இவற்றை நாம் தெளிவாக வைத்திருப்பதோடு, தேவைப்படும் மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி உதவவேண்டியது இன்றைய காலத்தின் தேவை ஆகும்.

**இர.சந்திரசேகர சர்மா M.A (Jaffna)**




# நிலாவில் தாவரம் வளர்க்கலாம்



நிலா இறைவனின் பூந்தோட்டம் என ஒரு கவிஞன் பாடினான். ஆனால் அங்கு காலடி வைத்த 'நீல் ஆம்ஸ்றோங்' அது பாறைகள் நிறைந்த பெருவெளி என்று கூறினான். எப்படியாயினும், சந்திரனில் பூக்கள் பூத்துக் குலுங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிலைய அதிகாரிகள் சந்திரத் தரையில் உள்ள பாறைபோன்ற தரையில் தாம் சில தாவரவர்க்கத்தை வெற்றிகரமாக வளர்த்திருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்கள். அங்கு பூக்கள் பற்றீரியாக்களின் உதவியுடன் பூத்துக் குலுங்கியதாகவும் அந்தத் தாவரத்துக்கு தாங்கள் எவ்வகை போஷாக்குகளையும் அளிக்கவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தப் பூக்கள் சமீபத்தில் வியன்னா நகரில் நடைபெற்ற ஐரோப்பிய புவிச்சரித சங்கக் கூட்டத்தில் சிறிய சர்ச்சையை கிளப்பி விட்டிருந்தது. சந்திரனில் செயற்கை நீர்ச்சுற்றோட்டம் உருவாக்கினால் மட்டுமே தாவரங்கள் வளரும் சாத்தியம் உண்டு என ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மற்றும் தொழில்நுட்பமத்திய நிலையத்தைச் சேர்ந்த பெர்னாட் போயிங் கூறினார். இருப்பினும், அத்தாவரங்கள் பாதுகாப்பற்ற சந்திரத் தரையை வந்தடையும் உயர் மட்ட கதிரியக்கங்களுக்கு எவ்வாறு பிரதிபலிப்பைக் காட்டும் என எங்களால் எதிர்வு கூற முடியாது இருக்கிறது என்றார் அவர். அப்படிப்பட்ட பரிசோதனைகள் எதிர்காலத்தில் மனித இனம் அங்கு குடியேறும் வேளை அத்தகைய உயர் மட்ட கதிரியக்கத்திற்கு மனித உடல் எவ்வாறு இயைந்து போகும் என்பதையிட்டு விஞ்ஞானிகளுக்குப் போதிக்கும் ஆற்றல் பெற்றது. எனவே சந்திரனில் மக்கள் குடியேறும் வேளை அங்கு வசீகரமான மலர்கள் மனித இனத்தை வரவேற்கும் என நம்ப இடமுண்டு.

★★★

## தகவல் பெட்டகம்





# அந்தாட்டிக்கா கண்டம்: அங்கே வாழும் உயிரினம்

அந்தாட்டிக்கா பிரதேசமானது (Antarcticiegocan) தென் துருவத்தை சுற்றிலுமுள்ள பிரதேசமாகும். இது அந்தாட்டிக்கா கண்டத்தை உள்ளடக்கிய பகுதியாகும். இதுவே ஐந்தாவது மிகப்பெரிய கண்டமாகும். இக்கண்டம் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் ஒன்றாக இணைத்தால் வரும் பகுதிக்கு ஒப்பாகும். இதுவே மிகக் குளிரானதும் இருண்டதுமான நிலப்பரப்பு எனலாம். இதைச் சுற்றியுள்ள கடலானது மிகக் கொந்தளிப்பான தாகும். இங்கு ஒரு போதும் போதியளவு சூரிய வெளிச்சம் கிடைப்பதில்லை அதனால் அங்கு நிலம் வெதுப்படைவதில்லை அதனால் வருடம் முழுவதும் பனிப்படிந்து கிடக்கும்.

உலகில் மிகக்குளிரான காலம் -38 பாகை சென்ரிகிறேட் அந்தாட்டிக்காவிலேயே பதிவாகியுள்ளது. அங்கு நிலவும் கடும் குளிரின் காரணமாக எதுவும் பழுதடைவதில்லை அங்கு, பொருள்கள் அழிவதோ, துருப்பிடிப்பதோ, இல்லை. பக்ரீறியா என்றழைக்கப்படும் நுண்கிருமிகளும் இல்லை.

அந்தாட்டிக்கா ஒரு பனிப்படலமானதோர் பிரதேசம் அதன் கீழ் என்ன இருக்கிறது என்பதைக் கண்டறிய அகழ்வு ஆராய்ச்சிகள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. சில நிலக்கரி படிவங்களும் சிறுகனிப்பொருள்களும் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வேறு கனிப்பொருள்களும் இருக்கலாம். ஆனால் அவைகளைக் கண்டறிவது மிகக் [illegible]



அங்கு பூஞ்சணங்கள் மற்றும் அங்கி என்றழைக்கப்படும் தாவரம் போன்றவை காணப்படுகின்றன. இவை எதுவித பெறுமதியுமற்றவை. உணவுப்பொருள்களும் அல்ல. கடலில் இருந்து உணவைத்தேடிக் கொள்ளக்கூடிய பொதுவான பறவைகளும் கடல் புறாக்களும் காணப்படுகின்றன. அதேசமயம் பல்வேறு வகையான பென்குவின் பறவைகள் காணப்படுகின்றன. பென்குவின் இக்கண்டத்தின் கரைப் பகுதியில் வாழ்கின்றன. அங்கேயே அடைகாத்து குஞ்சு பொரிக்கின்றன. அவைகளின் செட்டைகள் வளர்ச்சிகுன்றியவை என்பதால் அவைகளால் பறக்கமுடியாது. ஆனால் கடலில் திறமாக நீந்தக்கூடியவை. அதேபோல் அந்தாட்டிக் கடலில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த 'சீல்' என்றழைக்கப்படும் நீர் நாய்கள் காணப்படுகின்றன. அந்தாட்டிக்காவில் உள்ள ஒரேதொழில் திமிங்கில வேட்டை மட்டும் தான். அதுவும் அருகிவிடும் என்பதால் திமிங்கில வேட்டையாடுதலுக்குச் சர்வதேச மட்டத்தில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

- ரம்யன் -

## ஞாபகங்கள்

என்
மனங்களில்
விதையாகிப்போன
உன்
ஞாபகங்களுக்கு
உன்
நினைவுகள்
தினந்தினம்
நீருற்றிச் செல்கின்றன...

க. நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளில் ஓராண்டு...



## அமரர் சின்னத்துரை பக்தகுணசீலன்

(உரிமையாளர் - பூங்கனிச்சோலை, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி)

ஆண்டவன் படைப்பில்
25.07.1961

அரக்கர் அழிப்பில்
09.05.2008

திதி: 29.04.2009

நிஜமொன்று நிழலாகியதோ...
அந்திமாலை வேளை
நிசப்தம் கலைந்தது
சலனமற்ற உன்னைச் சில
சன்னங்கள் சரித்தது
கலைக் கோயிலாம் உன் பூங்கா
கதவருகே சாய்ந்தனையோ
ஐயகோ நீ கூட அறியாய்
அநியாயமாக அழிக்கப்பட்டதை
நாம் என்ன பாதி செய்தோம்
உங்களை இழப்பதற்கு
அள்ளி அணைத்திட அன்பைச் சொரிந்திட
அப்பாவே உங்களையன்றி யாருண்டு
உறவுகள் நாம் கண்ணீரால் கரைகின்றோம்
கவலையில் எழுகின்றோம்
கனவாகி நிற்கும் உங்கள் உறவை
கற்பனையில் கண்டு வாழ்கின்றோம்
உங்கள் வரவுக்காய் காத்திருப்போம்...

அமரர் சின்னத்துரை பக்தகுணசீலன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (29.04.2009) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் அனைவரும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பூங்கனிச்சோலை,
இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.

(சி/558219)

மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்ட மெய்வன்மைப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரியில் மே 5,6இல்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் வலய மட்டத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான மாவட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் அடுத்த மாதம் 5,6ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் உரிய பாடசாலை அதிபர்களும், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களும் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-267)

# தென்மராட்சி வலய மெய்வன்மைப் போட்டிகள் மீசாலை வீரசிங்கம் ம.வி. முதலிடம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயாமகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

தேசியப் பாடசாலை வகை 1ஏபி, வகை 1சி ஆகிய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் மீசாலை வீரசிங்கம் ம.வி. முதலிடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ஆகியவை முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றன.

வகை II, வகை III ஆகிய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் கச்சாய் அ.த.க. பாடசாலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் ஆகியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றன. (4-207)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# 15 வயதுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் மாவட்டச் சம்பியனாகியது அளவெட்டி அருணாசலம்

வலி.வடக்கு,ஏப்.29

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியது முதல் இரு அணிகளும் சம பலத்துடன் மோதியபோதிலும் சில நிமிடங்களில் அருணாசலம் வித்தியாலயத்தின் கைகள் மைதானத்தில் மேலோங்கத் தொடங்கியது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களிலும் அருணாசலம் வித்தியாலயம் வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனாகியது.

முதல் இரண்டு சுற்றுக்களையும் முறையே 25:07, 25:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் அளவெட்டி அருணாசலம் தன் வசமாக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் மட்டுவில் தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (4-86)

# கே.ஸி.ஸி.ஸி.கிண்ணச் சுற்றுப்போட்டி

## செல்ரனின் அதிரடிச் சதத்தால் சென்றலைட்ஸ் வி.க. வெற்றி!

வலி.வடக்கு,ஏப்.29

கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்காகக் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கழகங்களுக்கிடையே லீக் முறையில் நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 28 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சுற்றுப்போட்டி ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 29.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

செல்ரன் 64 பந்துகளில் பத்து சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 122 ஓட்டங்களையும், றொகான் 25 ஓட்டங்களையும், ஜேம்ஸ் 19 ஓட்டங்களையும், நவநீத் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரவிசங்கர், பிரகலாதன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் விஷ்ணுகாந் 2 விக்கெட்டுகளையும் கோகுலன், ராஜகாந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 209 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பிரகலாதன் எட்டு சிக்ஸர்கள் அடங்கலாக 63 ஓட்டங்களையும், ரவிசங்கர் 38 ஓட்டங்களையும், நிக்சன் 22 ஓட்டங்களையும், பார்த்தீபன் 18 ஓட்டங்களையும், நிலீபன் 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 27 ஓட்டங்களும் கிடைத்தன.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக கழகத்தைச் சேர்ந்த நவநீத் 4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், மதுசன் 5 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டு களையும், நிசாந்தன் 6 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், கோபி, செல்ரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (4-86)

# 15 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்டத்தில் யூனியன் மாவட்ட சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,ஏப்.29

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளுமே ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையில் மோதிக்கொண்டபோதிலும் யூனியன் கல்லூரியின் கையே போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மேலோங்கிக் காணப்பட்டது.

போட்டி நிறைவில் யூனியன் கல்லூரி 18:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தை வெற்றிபெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் முதல் தடவையாக மாவட்ட மட்டப் போட்டியொன்றில் வெற்றி பெற்றுள்ளமை பலருடைய பாராட்டையும் பெற்றுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதிய போதிலும் ஆட்ட நிறைவில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 12:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியை வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)





பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் இடைவேளையின்போது இடம்பெற்ற மாணவர்களின் உடற்பயிற்சிக் காட்சியை முதலாவது படத்திலும் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை பதவிநிலை உத்தியோகத்தர் ஜெ.அரவிந்தன் உரையாற்றுவதையும் அருகில் அதிபர் அ.சா.அரியகுமார் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: கர்ணன்)*

# யாழ். வலய மெய்வன்மைப் போட்டிகள் மூன்றாம் நாள் நிகழ்வுகளின் அட்டவணை

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.கல்வி வலய மெய்வன்மைப் போட்டிகள் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

மெய்வன்மைப் போட்டிகளில் இன்று (மூன்றாம் நாள்) நடைபெறவுள்ள நிகழ்வுகள் பற்றி யாழ்.கல்வி வலயம் வெளியிட்டுள்ள நிகழ்ச்சி அட்டவணை விவரம் வருமாறு:

**மூன்றாம் நாள் நிகழ்ச்சி**

17 வயதுப் பெண் 800 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயதுப் பெண் 800 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயதுப் பெண் 800 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது ஆண் 800 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயது ஆண் 800 மீற்றர் ஓட்டம், 19 வயது ஆண் 800 மீற்றர் ஓட்டம் - இறுதி, 15 வயதுப் பெண் உயரம் பாய்தல் - இறுதி, 15 வயது ஆண் நீளம் பாய்தல் - இறுதி, 17 வயதுப் பெண் குண்டு போடுதல் - இறுதி, 17 வயது ஆண் தட்டெறிதல் - இறுதி, 19 வயதுப் பெண் ஈட்டி எறிதல் - இறுதி, 21 வயதுப் பெண் தட்டெறிதல் - இறுதி, 13 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 13 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 15 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 17 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 19 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 21 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 15 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 17 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 19 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 21 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு,

19 வயது ஆண் உயரம் பாய்தல் - இறுதி, 15 வயதுப் பெண் ஈட்டி எறிதல் - இறுதி, 17 வயதுப் பெண் நீளம் பாய்தல் - இறுதி, 21 வயதுப் பெண் குண்டு போடுதல் - இறுதி, 21 வயது ஆண் 4x400 மீற்றர் அஞ்சல் - இறுதி, 17 வயதுப் பெண் 4x400 மீற்றர் அஞ்சல் - இறுதி, 19 வயதுப் பெண் 4x400 மீற்றர் அஞ்சல் - இறுதி, 21 வயதுப் பெண் 4x400 மீற்றர் அஞ்சல் - இறுதி, 21 வயது ஆண் உயரம் பாய்தல் - இறுதி, 19 வயதுப் பெண் நீளம் பாய்தல் - இறுதி, 13 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 13 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயது ஆண் உயரம் பாய்தல் - இறுதி, 21 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயதுப் பெண் உயரம் பாய்தல் - இறுதி, 19 வயது ஆண் முப்பாய்ச்சல் - இறுதி, 19 வயது ஆண் ஈட்டி எறிதல் - இறுதி, 15 வயது ஆண் தட்டெறிதல் - இறுதி, 21 வயது ஆண் குண்டு போடுதல் - இறுதி, 21 வயதுப் பெண் உயரம் பாய்தல் - இறுதி, 17 வயதுப் பெண் ஈட்டி எறிதல் - இறுதி, 21 வயது ஆண் முப்பாய்ச்சல் - இறுதி, 17 வயது ஆண் முப்பாய்ச்சல் - இறுதி, 15 வயது ஆண் 4x400 மீற்றர் அஞ்சல் - இறுதி, 15 வயது பெண் 4x400 மீற்றர் அஞ்சல்,

15 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 13 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 13 வயதுப் பெண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 15 வயதுப் பெண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது ஆண் 100 மீற்றர் - இறுதி, 19 வயதுப் பெண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயதுப் பெண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 21 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம் - இறுதி, 11 வயது ஆண் 75 மீற்றர் ஓட்டம் - இறுதி, 11 வயதுப் பெண் 75 மீற்ர் ஓட்டம் - இறுதி, 17 வயது ஆண் 1500 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது ஆண் கோல் ஊன்றிப் பாய்தல் - இறுதி, 17 வயதுப் பெண் 100 மீற்றர் தடைதாண்டல், 19 வயதுப் பெண் 100 மீற்றர் தடைதாண்டல்,

15 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 15 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 17 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம் - இறுதி, 19 வயது ஆண் 110 மீற்றர் தடைதாண்டல் - இறுதி, 17 வயது ஆண் 110 மீற்றர் தடை தாண்டல் - இறுதி, 15 வயது ஆண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 15 வயது பெண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 17 வயதுப் பெண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 19 வயதுப் பெண் 4x100 மீற்றர் அஞ்சல் - இறுதி, 17 வயது ஆண் 4x400 மீற்றர் அஞ்சல் - இறுதி, 19 வயது ஆண் 4x400 மீற்றர் அஞ்சல் - இறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகரசபையினரால் நூலக விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.29

சாவகச்சேரி நகரசபையின் மூன்று பொது நூல் நிலையங்களினாலும் பொதுமக்களுக்கு நூலக விழிப்புணர்வு ஏற்படுத்தும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படவுள்ளன.

இவ் வருடம் தேசிய நூலக வாரமான மே 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை சபை எல்லைக் குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று நூலக விழிப்புணர்வினை ஏற்படுத்தவுள்ளனர்.

நூலக உத்தியோகத்தர்கள், நூலக தொண்டர் குழு ஆகியோருடன் நூலக அபிவிருத்தி ஆலோசனை சபை, நூலக வாசகர் வட்டம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் வீடு வீடாகச் செல்லவுள்ளனர்.

இதேவேளை நூலக வாரத்தில் மக்களிடமிருந்து புதிய, பழைய நூல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையினர் ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரி பிரதான பொதுநூலகம், மீசாலை, நுணாவில் ஆகிய கிளை நூலகங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி கருதி ஒவ்வொருவரும் தமது பிறந்த தினப் பரிசாகவும் உறவினரின் நினைவாகவும் நூல்களை வழங்கி உதவுமாறு பொதுமக்களையும் பொது அமைப்புகளையும், தொண்டர் நிறுவனங்களையும் நகரசபை செயலாளரும் நூலக அபிவிருத்தி ஆலோசனைச்சபையின் தலைவருமான திருமதி கு.ஆறுமுகம் கேட்டுள்ளார். (203-207)

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செ.கபிஸ்னா



செந்தில்குமார் - அனுராதா தம்பதியரின் செல்வப்புதல்வி செ.கபிஸ்னா தனது முதலாவது பிறந்த நாளை இன்று [29.04.2009] புதன்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். அவரை நல்வாழ்வு வாழ வாழ்த்துவோர் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, அத்தைமார், சித்தா, சித்தி, மாமா, பெரியமாமா, சின்னமாமா, பெரியம்மா, பெரியப்பா.

S.செந்தில்
(தந்தை).

சந்நிதி றோட்
பத்தமேனி, அச்சுவேலி.

(848540)


COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road, Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2009 80%OFF

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Diploma in Microsoft Office – 3 Months – 1500/=
Diploma in Desktop Publishing – 4 Months – ~~10000~~ 2000/=
Diploma in Web Page Designing – 3 Months – ~~10750~~ 2150/=
Diploma in Graphic Designing – 4 Months – ~~10750~~ 2150/=
Diploma in Hardware Engineering – 3 Months – ~~10000~~ 2000/=
Diploma in Auto CAD – 3 Months – ~~10000~~ 2000/=
Diploma in Accounting Package – 3 Months – ~~10750~~ 2150/=
Diploma in Computer Science – 4 Months – ~~10750~~ 2150/=
Honors Diploma in Computer Science – 3 Months – ~~13000~~ 2600/=

50% Off Advance Courses
Dip. in. Multimedia 2750
Dip. in. Video Editing 3250

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

May 15 ம் தி... ...முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்.
Batch I : 02/05/2009 09AM/ 02PM
Batch II : 03/05/2009 09AM/ 02PM
Batch III : 04/05/2009 03PM
Batch IV : 05/05/2009 11AM/
Batch V : 07/05/2009 11AM/


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
10 ★ 01 ★ 1929



மறைவு
30 ★ 03 ★ 2009

### அமரர் மரியதாஸ் பேதுருப்பிள்ளை

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழந்த எங்கள் தெய்வமே எங்களை விட்டு விண்ணுலகு சென்று திங்களொன்று கடந்த பின்பும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
காந்தன் வீதி, சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாடும்
குடும்பத்தினர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

மண்டுவில்,ஏப்.29

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் கோழிக்குஞ்சுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

பயனாளி ஒருவருக்கு 15 கோழிக்குஞ்சுகள் வீதம் 100 பயனாளிகளுக்கு தேவைப்படும் கோழிக்குஞ்சுகளை கொள்வனவு செய்யும் முயற்சியில் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2-3 மாதத்திற்கு இடைப்பட்ட கோழிக் குஞ்சுகள் விற்பனை செய்ய விரும்பும் பண்ணையாளர்கள், பொதுமக்கள் விலை விவரங்களுடன் சாவகச்சேரி கால்நடை வைத்தியசாலைக்கு முன்னுள்ள சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு முகாமையாளர் தா. பாலசுந்தரம் அறிவித்துள்ளார். (201-59)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், கனடா பிரஜாவுரிமை புதம் 2ம் பாதம் 28 வயது மணமகனுக்கு மணமகள் தேவை
தொடர்பு: 0777066487

## கண்ணீர் அஞ்சலி



எமது திட்டப்பணிப்பாளராக கடமையாற்றும் திரு.இராஜரட்ணம் அவர்களின் பாரியார்

### திருமதி இராஜரட்ணம் குணலோகநாயகி B.A. (ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்கள் (25.04.2009) சிவபதம் அடைந்த செய்தி கேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்இலங்கைதினருக் கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.

கெயர்-சர்வதேசம், யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி மார்க்கண்டு

(முன்னாள் சாரதி, இலங்கை போ.சபை C.T.B.)



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மார்க்கண்டு (24.04.2009) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னுக்கண்டு, அப்புக்குட்டி ஆகியோரின் சகோதரனும் கமலவேணி யின் அன்புக் கணவரும், அனுஷகுமாரி (வவுனியா), சூரிய குமாரி (ஜேர்மனி), அருணகிரிநாதன் (டோகா), சந்திரகுமாரி, நிஷ்சங்கர் (டோகா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வ ராஜா (குவைத்), பொன்னுத்துரை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், கலாமோகன், றெஜிமோகன், நடனபைரவி, கானப்பிரியன், ஆரோன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2009) புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரையாம்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கண்டு ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### சின்னத்தம்பி கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர்)



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா (27.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-உமயம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா இராசலட்சுமியின் (கமலா) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற அன்னம்மா சண்முகம் அவர்களின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சண்முகம், காலஞ்சென்வர்களான முத்திலிங்கம் (J.P.), மகேஸ்வரி, பொன்னம்மா மற்றும் விக்னேஸ்வரன் (சிறி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலச்சந்திரன் (ஜேர்மனி), சந்திரறஜனி, சந்திரவதனி, பாலமுருகன் (பொறியியலாளர்-அமெரிக்கா), பாலமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவனேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற மகேஸ்வரன், பரமேஸ்வரன் உதயலதா (பொறியியலாளர்-அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும் அபி ராமி (ஜேர்மனி), அஞ்சலி (ஜேர்மனி), இராகவன் (இந்தியா), தர்சன் (இந் தியா), தாரணி, அமரர் கருணாகரன், பவித்திரா, பவானி, அவீனா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2009) புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
க.பாலமோகன்
(மகன்).

### சின்னத்துரை தனபாலசிங்கம்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை தனபாலசிங்கம் 26.04.2009 ஞாயிற்றுக் கிழமை காலமானார்

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் ,காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜீவரதியின் பாசமிகு கணவரும் , குமரகுரு, குகனேசன், குகதாசன் , துஜீதா, விக்னேஸ்வரன் ,சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றோசானா, டேசி, தர்ஷினி, சாமினி, ஆகியோரின் அன்பு மாமனும் சகினா, பிரியங்கா, வதனா, ஜீவரதி, கஜீவன், பூமிகா, விதுரன், குருசோத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.04.2009) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஆசிரியர் கந்தசாமி வீதி,
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ராஜபக்ஷவின் அறிவிப்பில் போர்நிறுத்தம் என்ற சொல்லே இல்லை

## இது தமிழரையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் வேலை என்கிறார் வைகோ



சென்னை, ஏப். 29

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிவிப்பில் போர் நிறுத்தம் என்ற வார்த்தையே இல்லை. இது தமிழர்களையும், சர்வதேச சமுதாயத்தையும் ஏமாற்றும் வேலை - என்று ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ கூறியிருக்கிறார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்ததாலும், இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கண்டித்ததாலும், கிழக்கு தைமூரிலும், கொசோவாவிலும் தலையிட்டதைப் போல இலங்கையிலும் சர்வதேச நாடுகள் தலையிட்டுவிடுமோ என்ற அச்சத்தில் இலங்கை ஜனாதிபதி மோசடியான அறிவிப்பை செய்துள்ளார்.

அந்த அறிவிப்பு போர் நிறுத்தமல்ல. இதுவரை நடந்த தமிழர் இன அழிப்புப் போரை தந்திரமாக உலக நாடுகளை ஏமாற்றிவிட்டு வேறு வகையில் நடத்தத் திட்டமிட்டுள்ள அறிவிப்பாகும்.

இந்த அறிவிப்புக்கு பின்னரும் 27ஆம் திகதி பகல் 12.30, 1.10 மணியளவிலும் இலங்கை விமானங்கள் முல்லைவாய்க்கால் பகுதியில் குண்டு வீச்சு நடத்தியதில் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பயங்கர ஆயுதங்கள் எவையென்று இலங்கை அரசு விளக்கம் கொடுக்கவில்லை.

எனவே, பீரங்கிகளையும், கிளாஸ்டர்களையும், சிறிய ஏவுகணைகளையும் பயன்படுத்தி குண்டு வீசி தொடர்ந்து தாக்குதல் நடத்துகிறது. சர்வதேச சமுதாயத்தையும், தமிழ்நாட்டு மக்களையும் ஏமாற்றுவதற்காக ராஜபக்ஷ இந்த மோசடியான அறிவிப்பைச் செய்துள்ளார்.

நாசகார ஆயுதங்களை பயன்படுத்தாமல் மற்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி போரை நடத்தப்போகிறோம் எனவும், தமிழ் மக்கள் முல்லைத்தீவில் இருந்து வெளியேற வேண்டும் என்றும், அரசு அறிவிக்கும் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் வரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அறிவிப்பில் போர் நிறுத்தம் என்ற வார்த்தையே இல்லை. விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துவிட்டனர். யுத்தத்தை இலங்கை அரசு நடத்துவதற்கு ஆயுதம் கொடுத்து இயக்கும் இந்திய அரசு போரை நிறுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை - என்றார்.



சிறையிலிருந்து வெளிவந்த ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப்புயல் இயக்குநர் சீமான் தனது ஆதரவாளர்கள் மத்தியில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்த போது.........

## தமிழகத்தில் புலிகள் ஊடுருவ வாய்ப்பு உளவுப் பிரிவுப் பொலிஸார் எச்சரிக்கை

தமிழகத்தில் கடல்வழியாக விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் ஊடுருவ வாய்ப்பிருக்கிறது - என்று மத்திய உளவுப் பிரிவு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இதுதொடர்பாக தமிழக சட்டம் - ஒழுங்கு கூடுதல் பொலிஸ் டி.ஜி.பி. ராஜேந்திரன் கூறியதாவது:-

தமிழகக் கடலோரப் பகுதி ஏற்கனவே உஷார் படுத்தப்பட்டுள்ளது. கடலோரக் காவல் படை, கடற்படை மற்றும் உள்ளூர் பொலிஸார் தொடர்ந்து தீவிர ரோந்துப் பணியிலும், கண்காணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகத் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக 94 கம்பனி துணை இராணுவப்படையினர் அழைக்கப்பட்டனர். தற்போது 23 கம்பனி துணை இராணுவப் படையினர் தமிழகம் வந்து விட்டனர்.

# தமிழ் நாட்டுக்கு ஓர் எம்.ஜி.ஆர்.; தமிழீழத்துக்கு ஒரு பிரபாகரன்!

## சிறை மீண்ட பின்னர் சீமான் முழக்கம்

புதுச்சேரி, ஏப். 29

சிறையில் இருந்தபோது இலங்கையில் நடப்பதையும் இங்கே நடப்பதையும் தெரிந்து கொண்டு கழிவறைக்குள் உட்கார்ந்து அழுதேன். எம்.ஜி.ஆர். தமிழ் இனத்துக்காக பாடுபட்டவர். தமிழ் நாட்டுக்கு ஒரு எம்.ஜி.ஆர். தமிழ் ஈழத்துக்கு ஒரு பிரபாகரன்.

- இவ்வாறு நிபந்தனைப் பிணையில் நேற்றுமுன்தினம் சிறை மீண்ட ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப்புயல் சீமான்முழங்கினார். அவர் காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரம் செய்யப்போகிறார் எனவும் கூறியுள்ளார்.

இயக்குநர்கள் சீமான், மணிவண்ணன், வி.எம்.குமார் உட்பட 10 இயக்குநர்கள் இணைந்து நடிக்கும் மாயாண்டி குடும்பத்தார் என்ற படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது.

விழாவில் கலந்துகொண்ட சீமான் பேசியவை வருமாறு -

நான் 70 நாள்கள் தனிமைச் சிறைக்குள் இருந்தேன். இலங்கையில் நடப்பதையும் இங்கே நடப்பதையும் தெரிந்துகொண்டு கழிவறைக்குள் உட்கார்ந்து அழுதேன். கட்டிப் பிடித்து அழக்கூட யாரும் துணைக்குஇல்லை.

எம்.ஜி.ஆர்.தான் தமிழ் இனத் தலைவர், தமிழ் இனத்துக்காக பாடுபட்டவர். தமிழ் நாட்டுக்கு ஒரு எம்.ஜி.ஆர். தமிழ் ஈழத்துக்கு ஒரு பிரபாகரன். இப்படிப் பேசுவதால் என்னை யாரும் கைதுசெய்யமுடியாது. கைதுசெய்தால் தேர்தலில் தோற்றுப்போய்விடுவார்கள் - என்றார்.

முன்னதாக தனது விடுதலை குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

சட்டம் என்னை விடுதலை செய்துள்ளது. இது தனிப்பட்ட சீமானின் விடுதலை அல்ல. கருத்துச்சுதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி. என்மீது போடப்பட்ட வழக்கு தேவையற்றது. தவறானது.

தடைசெய்யப்பட்ட இயக்கத்திற்கு எதிராக எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம், ஆதரித்துப் பேசக்கூடாது என்ற சர்வாதிகாரம் இருந்தது. அதை எனது வழக்கு உடைத்தெறிந்துள்ளது. எங்களுக்குக் கிடைக்க வேண்டியது விடுதலை. அது கிடைக்கும்வரை போராடுவோம்.

ஈழ விடுதலையை யார் அங்கீகரிக்கிறார்களோ, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கப் பாடுபடுகிறார்களோ அவர்களுக்கு ஆதரவு அளிப்போம். தமிழீழத்தை ஆதரிக்கும் இயக்கத்துக்கு ஆதரவு அளிப்போம். இதற்காக பலபேர் பல வடிவங்களில் போராடுகிறார்கள். 13 பேர் தீக்குளித்து இறந்துள்ளனர்.

காங்கிரஸ்தான் இனப்பேரழிவுக்கு காரணம். காங்கிரஸை வீழ்த்தும்வரை போராடுவோம். அது யாருக்கு சாதகம், பாதகம் என்று பார்க்கமாட்டோம். இலங்கைத் தமிழர் பற்றி பலரும் பேசும்போது, சோனியாகாந்தி ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. அதற்கு என்ன அர்த்தம்? முதலாம் திகதிக்கு பின்னர் என்னைக் கைது செய்த இடத்திலிருந்து பிரசாரம் தொடங்குவேன் - என்றார்.

# இலங்கையில் போர் நிறுத்தப்பட்டதா? கலைஞர் அரங்கேற்றிய நாடகமே இது!

## விஜயகாந்த் தெரிவிப்பு



வேலூர், ஏப். 29

கருணாநிதியின் உண்ணாவிரதம் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நாடகம். இலங்கையில் போர் நிறுத்தம் அறிவிப்பு வெளியாகிவிட்டது என்று கூறி அவரும், மற்றவர்களும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுச் சென்றுவிட்டனர். உண்மையில் அங்கு போர் நிறுத்தப்பட்டதா? மக்களை ஏமாற்ற கருணாநிதி நாடகமாடுகிறார் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தேர்தல் பிரசாரம் செய்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் பேசியவை வருமாறு -

2 நாள்களுக்கு முன்பு இலங்கைப் போர் குறித்து கூறும்போது, இன்று ஓர் இரவு பொறுத்திருந்து பார்ப்போம் என்று முதல்வர் கருணாநிதி கூறினார். அதற்கு என்ன அர்த்தம் என்று அப்போது தெரியவில்லை. இன்று காலை (அதாவது நேற்றுமுன்தினம்) காலவரையற்ற உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். இந்த உண்ணாவிரதம் முன்கூட்டியே திட்டமிட்ட நாடகம்.

இலங்கையில் போர் நிறுத்தம் அறிவிப்பு வெளியாகிவிட்டது என்று கூறி, அவரும், மற்றவர்களும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுச் சென்றுவிட்டனர். உண்மையில் அங்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இரண்டொரு நாள்களில் தெரியவரும்.

உங்களுக்காகத்தான் நான் தே.மு.தி.கவை தொடங்கினேன். இன்று வரை மாறாமல் இருக்கிறேன். உங்களை நம்பி இருக்கிறேன். ஆனால், அவர்கள் நாடகம் ஆடுகிறார்கள்.

அவர்கள் (தி.மு.க., அ.தி.மு.க) உங்களுக்கு எப்படி உதவி செய்வார்கள்? - என்றார்.

# ஈழத்தமிழருக்கு தமிழக அரசின் 3 ஆம் கட்ட நிவாரணப்பொருள்!

## மே 5க்குள் அனுப்பிவைப்பு

சென்னை, ஏப். 29

இலங்கைத் தமிழர்களுக்கு 7 கோடி ரூபா மதிப்பிலான நிவாரணப் பொருள்கள் 3ஆம் கட்டமாக மே மாதம் 5ஆம் திகதிக்குள் அனுப்பப்படும் - என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

50 ஆயிரம் குடும்பங்களுக்குத் தேவையான உணவு, மருந்து, தண்ணீரைச் சுத்திகரிக்கும் வில்லைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்பட இருக்கின்றன என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கைத் தமிழர்களின் நிவாரணத்திற்காக தமிழக அரசின் சார்பில் 25 கோடி ரூபா வழங்கப்படும் என்றும், ஏற்கனவே மத்திய அரசு வழங்குவதாக அறிவித்துள்ள 100 கோடி ரூபாவுடன் இதையும் சேர்த்து 125 கோடி ரூபாவாக வழங்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# ஈழத்தமிழரின் உயிருக்கு உத்தரவாதம் தரும் தமிழீழக் கோரிக்கை சட்டவிரோதமாகுமா?

## சீற்றமடைந்து கேட்கிறார் ஜெயலலிதா



சென்னை, ஏப். 29

தமிழ் ஈழம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பது தேச விரோதமாகிவிடுமா? இலங்கையில் தனி ஈழம் அமைப்பதுதான் ஒரே தீர்வு என்று நான் சொன்னது எந்த இந்திய சட்டத்துக்கு எதிரானது - என்று காங்கிரஸிடம் கேள்வியெழுப்பியுள்ளார் அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா.

குண்டுவீச்சு மட்டும் நிறுத்தம் என்பதை போர் நிறுத்தம் என்று எப்படிச் சொல்ல முடியும். இலங்கைத் தமிழர் பிரச்சினையில், எண்ணற்ற நாடகங்களை அரங்கேற்றி வந்த கருணாநிதி, ஒரு உண்ணாவிரத காட்சியையும் அரங்கேற்றி முடித்திருக்கிறார் அவர் எனவும் கூறியுள்ளார்.

வாழ வழியின்றித் தவிக்கும் தமிழர்கள் இலங்கையிலேயே கௌரவமாக வாழ, வடக்கையும் கிழக்கையும் இணைத்து தமிழ் ஈழத்தை அமைத்துக் கொடுப்பதுதான் இனி ஒரே வழி என்று ஜெயலலிதா பேசியிருந்தார். அது சட்ட விரோதம் என்று மத்திய அமைச்சர் கபில் சிபில் டில்லியில் கண்டித்திருக்கிறார். இதற்குப் பதிலளிக்கும் விதமாகவே ஜெயலலிதா இதனைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு-

இந்தியாவிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து தனி நாடு தாருங்கள் என்று நான் கேட்கவில்லை; இந்த நாட்டின் மீது அளவில்லாத பற்றும் பாசமும் உள்ளவள் நான். இலங்கையில் சம உரிமைகள் மறுக்கப்பட்ட, இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படும் தமிழ் மக்கள் வாழ தனி ஈழம் வேண்டும் என்று கோருகிறேன்.

இலங்கையிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து தனி ஈழம் உருவாக்கப்பட வேண்டும் என்பது எப்படி தேச விரோதச் செயலாகிவிடும்?

விடுதலைப் போருக்கான போராட்டம் என்று கூறி பயங்கரவாதச் செயலில் யார் ஈடுபட்டாலும் அதைக் கண்டித்து வருகிறேன்; தீவிரவாதத்தை நான் எப்போதுமே ஆதரித்ததில்லை. அதே சமயம், அரசின் அடக்குமுறையால் மக்களில் கணிசமானவர்கள் பாதிக்கப்படுவதையும் என்னால் கண்டிக்காமல் இருக்க முடியாது.

இலங்கையில் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள அகதி முகாம்கள் கட்டுக்காவல் மிகுந்த சிறைச்சாலைகளைவிட மோசமான நிலையில் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் [illegible] இருப்பவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதபடி கண்காணிப்பு நிலவுகிறது. குடும்பங்களையும் உறவினர்களையும் பிரிந்து அவர்களைத்தொடர்பு கொள்ளவும் வழி இல்லாமல், அடிப்படை மனித உரிமைகள் கூட இல்லாத நிலையில் தமிழர்கள் விலங்குகளைப்போல நடத்தப்படுகிறார்கள். அப்படிப்பட்ட முகாம்களுக்குப் போக வேண்டாம் என்ற உறுதியோடு வெட்ட வெளியில் தங்குகின்றவர்கள் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் நடக்கும் துப்பாக்கிச் சண்டையில் சிக்கிக் கொள்கிறார்கள்.

இருதரப்பும் சண்டையை நிறுத்த வேண்டும், தமிழர்கள் பாரம்பரியமாக வசித்துவரும் பகுதிகள் தனியே பிரித்து அடையாளம் காணப்பட்டு, அங்கு வாழும் தமிழர்களுக்கு சிங்களர்வகளைப் போலவே அனைத்து உரிமைகளும் சமமாக வழங்கப்பட்டு, மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். அதை ஏற்க முடியாது என்கிறது இலங்கை அரசு. அப்படிப்பட்ட நிலையில் இலங்கையில் தமிழர்களுக்கென்று தனி ஈழம் கேட்பது தவறா?

தமிழர்கள் மட்டும் அல்ல, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற மேலை நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் போரை நிறுத்திவிட்டு அரசியல் தீர்வுகாண பேச்சு நடத்துங்கள் என்று விடுத்த வேண்டுகோளையும் இலங்கை அரசு மதிக்க முடியாது என்று மறுக்கிறது. இந்த நிலையில் தமிழர்கள் மானத்தோடும், உரிமையோடும், பாதுகாப்போடும் வாழ ஒரே வழி தமிழ் ஈழம்தான்.

லட்சக்கணக்கான தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் தரும் ஒரு கோரிக்கை எப்படி இந்திய சட்டங்களுக்கு எதிரானதாக இருக்கும்? இதை எப்படி சட்ட விரோதமான பேச்சு என்று காங்கிரஸார் கண்டிக்கிறார்கள் - என்று கேள்வியெழுப்புகிறார்.

# தூக்கத்தில் கட்டிலிலிருந்து தவறி தந்தை வீழ்ந்ததில் குழந்தை பலி!

## பிறந்து 15 நாட்களில் சோகம்.....

சென்னை, ஏப். 29

கட்டிலில் படுத்திருந்த தந்தை தூக்கத்தில் தவறி விழுந்ததால் பிறந்து 15 நாள்களேயான பெண் குழந்தை நசுங்கிப் பரிதாபமாக உயிரிழந்தது.

தரமணி எம்.ஜி.ஆர். நகர், கலைஞர் தெருவைச் சேர்ந்தவர் சிவா, கார் பென்டர். இவரது மனைவி அமுலு. இவர்களுக்கு 8 மற்றும் 7 வயதில் 2 மகன்கள் உள்ளனர். கடந்த 15 நாள்களுக்கு முன் அமுலுவுக்கு 3ஆவதாக பெண் குழந்தை பிறந்தது. மருத்துவமனையிலிருந்து கடந்த வாரம் குழந்தையுடன் அமுலு வீடு திரும்பினார்.

கடந்த 26ஆம் திகதி இரவு அமுலுவும், குழந்தையும் தரையில் படுத்துத்தூங்கினர். சிவா கட்டிலில் படுத்திருந்தார். நள்ளிரவு 1.30 மணிக்கு சிவா தூக்கத்தில் புரண்டு படுத்த போது, கட்டிலில் இருந்து தவறி விழுந்தார். குழந்தையின் மீது அவர் விழுந்ததால், குழந்தைக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

மூச்சுத் திணறலுடன் அவதிப்பட்ட குழந்தையை திருவல்லிக்கேணியில் உள்ள கஸ்தூரி பாய் அரச மகப்பேறு மருத்துவமனைக்கு கொண்டுசென்றனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி குழந்தை நேற்றுமுன்தினம் பரிதாபமாக இறந்தது. இதுகுறித்து [illegible] இன்ஸ்பெக்டர் ஜான்ஜோசப் விசாரித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பாதுகாப்பு வலயத்தின் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது மக்களில் பலரும் அவரவர் நின்ற, இருந்த இடங்களில் இறந்து, விழுந்து கிடக்கின்றனர்.

## அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் இடையே

# 3ஆவது ஒருநாள் போட்டியில் வென்று 2-1 என முன்னிலை வகிக்கிறது ஆஸி.

அபுதாபி, ஏப்.29

அபுதாபியில் நேற்றுமுன்தினம் நடந்த அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 27 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஒருநாள் போட்டித் தொடரில் 2-1 என முன்னிலை வகிக்கிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக் கிளார்க் துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தார். அதன்படி அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களான கோப்ஸ் - ஹைடன் ஜோடி களமிறங்கியது.

ஆரம்ப ஜோடி சற்று நிதானமாக ஆடி அணியின் ஓட்டஎண்ணிக்கையை மந்தமாகவே உயர்த்தியது. இந்த நிலையில் ஆரம்ப வீரர் கோப்ஸ் (15 ஓட்டங்கள்) ரண்-அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்துக் களமிறங்கிய வட்ஸன் இரண்டு பந்துகளுக்கு முகம்கொடுத்து ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அவ்ரைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக் கிளார்க் களமிறங்கினார். அவர் நிதானமாக ஆடி அணியின் ஓட்டஎண்ணிக்கையை உயர்த்தினார். கிளார்க் 66 ஓட்டங்களை எடுத்த நிலையில் அவ்ரடியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து களம் கண்ட வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் வெளியேறினார்கள். அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை எடுத்தது.

எளிய இலக்கை நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியால் இலக்கை எட்ட முடியவில்லை. பாகிஸ்தான் அணி வீரர்களின் விக்கெட்டுக்கள், அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் அடுத்தடுத்து சரிந்தன.

பாகிஸ்தான் அணி சார்பில் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய சல்மான் பட் 48 ஓட்டங்கள், அகமட் சிகாட் 40 ஓட்டங்கள் ஆகிய இருவருமே ஓரளவுக்குச் சிறப்பாக ஆடினார்கள். 47.1 ஓவர்கள் முடிவில் பாகிஸ்தான் அணி 171 ஓட்டங்களை மட்டுமே சேர்த்த நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அவுஸ்திரேலிய அணி 27 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக் கிளார்க் தெரிவுசெய்யப்பட்டார்.



## பாகிஸ்தான் அணியில் இடம் கிடைத்தும் அக்தரால் விக்கெட் வீழ்த்த முடியவில்லை

கராச்சி, ஏப்ரல் 29

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் மோசமான நடவடிக்கை காரணமாக, அடிக்கடி பிரச்சினைகளில் சிக்கிக் கொள்வார். இதனால் அணியிலிருந்து பலமுறை நீக்கப்பட்டுள்ளார். தற்போது பிரச்சினைகளைக் கடந்து அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இடம்பிடித்தார்.

முதல் இரண்டு போட்டிகளில் பந்து வீசிய அக்தர், ஒரு விக்கெட்டைக்கூடக் கைப்பற்றவில்லை. அணியில் இடம் கிடைத்தும் திறமையை வெளிப்படுத்தத் தவறி வரும் அக்தருக்கு, நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாவது அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் வாய்ப்பு மறுக்கப்பட்டது. அக்தரின் செயற்பாடுகள் குறித்து பாகிஸ்தானின் முன்னாள் வீரர் சாகிர் அப் பாஸ் கூறுகையில், ''நெருக்கடியில் இருக்கும் அக்தர், ஓய்வு அறிவிப்பை வெளியிடுவது நல்லது. இளம் வீரர்களுக்கு வழிவிடும் வகையில், அக்தர் சரியான முடிவை எடுக்க வேண்டும்'' - என ஆலோசனை அளித்துள்ளார்.

## பாகிஸ்தான் அரசுடனான அமைதிப் பேச்சை முறித்துக் கொண்டது தலிபான் அமைப்பு



பாகிஸ்தானில் இராணுவம் தலிபான் தீவிரவாதிகள் மீது மேற்கொண்ட தாக்குதலை அடுத்து, தலிபான்களின் ஷரியா முகம்மதி அமைப்பு, அரசுடனான அமைதிப் பேச்சுக்களை முறித்துக்கொண்டது. இராணுவம் நடத்திய தாக்குதலில் 50 தீவிரவாதிகள் பலியாகியுள்ளார்கள்.

பாகிஸ்தானின் வட மேற்கு எல்லைப்புற மாநிலத்திலுள்ள ஸ்வாட் பகுதிக்கு வெளியே தன் செல்வாக்கை விரிவுபடுத்த தலிபான் முயன்றதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பை தெரிவித்தது. நிதி உதவியை நிறுத்தி விடுவோம் என்றும் அது மிரட்டியது. இதைத் தொடர்ந்து தலிபான்கள் மீது அதிரடித் தாக்குதலை பாகிஸ்தான் இராணுவம் கடந்த 2 நாள்களாக நடத்தி வருகிறது.

ஸ்வாட் பகுதி அருகே உள்ள டிர் மாவட்டத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த மறைவிடங்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியது. இராணுவ ஹெலிக்கொப்டர்கள் வானத்தில் வட்டமிட்டபடி மேற்கொண்ட தாக்குதலில் ... தீவிரவாதிகள் பலியானார்கள். அவர்களில் தலிபான் தளபதி மவுல்வி ஷாஹித்தும் ஒருவர். பலர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் நடந்து கொண்டிருந்த போது, அரசுக்கும் டெக்ரிக்-இ-நிபாஸ்- இ-ஷரியா முகம்மதி என்ற தீவிரவாத அமைப்புக்குமிடையே அமைதிப் பேச்சுகள் நடந்து கொண்டிருந்தன.

இராணுவத் தாக்குதலில் 50 தீவிரவாதிகள் பலியான தகவல் வெளியானதும், பேச்சுகளை ஷரியா முகம்மதி அமைப்பினர் கைவிட்டனர். இராணுவம் தாக்குதலை நிறுத்தாத வரை அரசுடன் பேச்சுகள் கிடையா என்றும் அந்த அமைப்பினர் தெரிவித்துவிட்டனர். இதன் மூலம் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தம் கேள்விக்குரியதொன்றாகிவிட்டது.

தலிபான் செய்தித் தொடர்பாளர் முஸ்லிம் கான் நிருபர்களிடம் கூறுகையில், ''ஸ்வாட் அமைதி ஒப்பந்தத்தில் இஸ்லாமியச் சட்டம் ஸ்வாட் பகுதியில் நடைமுறைக்கு வந்ததும், தலிபான் தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போடவேண்டும் எனக் கோரும் ஒரு சரத்து உள்ளது. அதன் அடிப்படையில் நாங்கள் ஆயுதங்களை கீழே போடமாட்டோம். என்ன விலை கொடுத்தாலும் அதை நாங்கள் செய்யமாட்டோம்'' என்றார்.

இதற்கிடையில் டிர் மாவட்டத்திலுள்ள லால்கிலா, இஸ்லாம்புரா, கல்கோட் ஆகியவை உட்பட பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. லால் கிலா கிராமத்தை இராணுவம் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. அந்த பகுதிகளில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டமையை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதிகளை விட்டு தப்பி ஓடிவிட்டார்கள்.

## பாகிஸ்தானில் நடக்காத உலகக் கோப்பை ஆசிய நாட்டில் எவ்வாறு நடக்கும் - மியாண்டாட்

2011ஆம் ஆண்டு உலகக் கோப்பையை ஆசியாவிலிருந்து மாற்றவேண்டும் என்று முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவர் ஜாவித் மியான்டாட் கூறியுள்ளார். 2011ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து நடத்தவுள்ளன.

இதனிடையே பாகிஸ்தானில் பாதுகாப்பு குறித்த அச்சம் நிலவுவதாலும், அந்நாட்டில் இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாலும் உலகக் கோப்பை போட்டிகளை பாகிஸ்தானில் நடத்த சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அனுமதி மறுத்துவிட்டது.

இந்நிலையில் முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவர் ஜாவித் மியான்டாட் உலகக் கோப்பையை ஆசியாவிலிருந்து மாற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தியாவில் அவுஸ்திரேலிய அணி டேவிஸ் கோப்பை போட்டிகளில் விளையாட மறுத்துள்ளதை சுட்டிக் காட்டிய அவர், பாகிஸ்தானில் உலகக் கோப்பை ஆட்டங்களை நடத்த முடியாது என்றால் இந்தியாவிலும் நடத்த முடியாது என்றும் கூறியுள்ளார்.

எனவே உலகக் கோப்பையை ஆசியாவிலிருந்து மாற்றவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். தற்போது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர் டுபாயில் நடைபெற்று வருவதை குறிப்பிட்டுள்ள அவர், டுபாய் மற்றும் அபுதாபியில் உலகக் கோப்பை ஆட்டங்களை வைத்துக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

# ஆயிரக் கணக்கில் தமிழர் செத்து மடிவது ராகுலுக்கு சாதாரண விடயமாகிவிட்டது!

## பா.ஜ.கவுக்கு ஆதரவாக சிவாஜிலிங்கம் எம்.பி. பிரசாரம்

தென் சென்னை தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க. மாநிலத் தலைவர் இல. கணேசனுக்கு ஆதரவாக தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. சிவாஜிலிங்கம் பிரசாரம் செய்து வருகிறார்.

அதன்போது, இலங்கையில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் செத்துமடிவது ராகுல்காந்திக்கு சாதாரண விடயமாகிவிட்டது என்று அவர் ஆவேசமடைந்தார்.

தென் சென்னை பா.ஜ.க. வேட்பாளர் இல. கணேசனுக்கு ஆதரவாக அவர் பிரசாரம் செய்து வருகிறார். மைலாப்பூர் பேரவை தொகுதிக் குட்பட்ட பகுதிகளில் கடந்த [illegible] பிரசாரம் செய்தபோது அவர் கூறியதாவது -

பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் அத்வானியை சந்தித்து இலங்கைத் தமிழர் பாதுகாப்புக் குறித்து பேசினேன். அவரும் அதை மிகவும் கனிவுடன் கேட்டறிந்து, பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் உடனடியாகத் தீர்வு காண்பேன் என்று உறுதி கூறினார். அதில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தற்போது நடந்து வரும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் அங்கு தமிழர்கள் செத்து மடிந்து வருகின்றனர். இந்த விவகாரம் தொடர்பாக, காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ராகுலை சந்தித்துப் பேசினேன். அவரோ, இதெல்லாம் சாதாரண விவகாரம் என்று கூறிவிட்டார். இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் செத்து மடிவது ராகுல்காந்திக்கு சாதாரண விடயமாகிவிட்டது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவின் ரொறன்ரோ நகரில் அமைந்துள்ள அமெரிக்க துணைத் தூதரகம் முன்பாக தமிழ் மக்கள் வீதிகளின் குறுக்கே அமர்ந்து மறியற்போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

# பிரிட்டன், பிரெஞ்சு அமைச்சர்கள் இருவரும் போர் நிறுத்தத்துக்கு அழுத்தம் கொடுப்பர்

கொழும்பு, ஏப். 29

இலங்கைக்கு இன்று விஜயம் மேற்கொள்ளும் பிரான்ஸ், பிரிட்டன் வெளி விவகார அமைச்சர்கள் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பர் - என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேசத்தினால் விடுக்கப்பட்டு வரும் யுத்த நிறுத்தத்திற்கான வேண்டுகோளை பிரிட்டன், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்கள் மீளவும் இலங்கை அரசிடம் விடுப்பார்கள்.

அதேவேளை, சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்கும் படியும் பொதுமக்களை பாதுகாக்கும் படியும் இலங்கையிடம் வலியுறுத்துவர் என்று பிரான்ஸின் வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

பொதுமக்களும் மனிதாபிமானப் பணியாளர்களும் போர் நடைபெறும் பகுதிகளில் சுதந் திரமாக நடமாட முடியாத நிலையையிட்டு நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இதனால் மனிதாபிமான உதவிகள், மருத்துவ வசதிகள் என்பன கிடைப்பதில் பாதிப்பு நிலவுகின்றது - என்றார்.

# கனடாவில் கவனஈர்ப்புப் போராட்டம் வீதிமறியல் போராட்டமாக மாறியது

## அமெரிக்கத் தூதரகம் முன்னால் ஆயிரக்கணக்கில் திரண்டனர்

ரொறன்ரோ, ஏப்.29

கனடாவின் ரொறன்ரோ நகரில் அமைந்துள்ள அமெரிக்க துணைத் தூதரகம் முன்பாக கடந்த வியாழக்கிழமை (23.04.09) பிற்பகல் 12 மணி தொடக்கம் தமிழ் இளையோரால் தொடங்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் வீதி மறிப்பு போராட்டமாக மாறியிருக்கின்றது.

ரொறன்ரோவில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்துக்கு முன்பாக ரொறன்ரோ நகரை ஊடறுத்துச் செல்லும் பெரு வீதியான யூனிவசிற்றி அவெனியூவில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டதனால் அவ் வீதி முடக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் சிறிலங்கா அரசின் மனிதப்படுகொலை தொடர்பான விவாதம் இன்று நடைபெறவுள்ளதால் இன்று போராட்டத்தில் மிகப்பெருமளவில் தமிழ்மக்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் ரொறன்ரோ மாநகரம் செயலிழக்கும் நிலை தோன்ற வாய்ப்புள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளையில் அமெரிக்க தூதரகத்தை மையப்படுத்தி மொன்றியல், ஒட்டாவா, கல்கரி போன்ற கனடாவின் பெரு நகரங்களிலும் தமிழ் மக்கள் கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

(அ)

# இந்தியாவின் பல்வேறு அழுத்தங்களுக்கு அடி பணிந்து நிற்கின்றது இலங்கை அரசு

## ஜே.வி.பியின் சோமவன்ஸ சாடுகிறார்

கொழும்பு, ஏப். 29

இந்தியாவின் பல்வேறு வகையான அழுத்தங்களுக்கு இலங்கை அரசு அடி பணிந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் காப்பாற்றவே இந்தியா மும்முரமாக முயற்சித்து வருகிறது - என்று ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

தேசிய கேட்போர் கூட கட்டடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸவே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

அரசு யுத்த நிறுத்தத்தை அறிவிக்காது, கனரக ஆயுதங்கள் மற்றும் விமானத் தாக்குதல்களை மோதல் களங்களில் நடத்த வேண்டாமென இராணுவத்துக்கு உத் தரவிட்டுள்ளது.

மோதல் இடம்பெறும் பகுதிகளில் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படின் பொது மக்களுக்கு உயிர்ச்சேதங்கள் அதிகளவில் ஏற்படும் என்பதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது. இவ்வாறான ஒரு அறிக்கையை வெளியிட்டது ஏன் என்று எமக்கு புரியவில்லை.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் இலங்கை வர இருந்தமை பற்றியும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகம் ஜோன்ஹோம்ஸ் வருகை பற்றியும் அரசு எவ்விதமான செய்திகளையும் வெளியிடவில்லை.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் இலங்கைக்கு வந்து பலவிதமான அழுத்தங்களை அரசுக்குக் கொடுத்துள்ளனர்.

இந்தியாவில் தேர்தல்கள் நடைபெறும் காலப்பகுதியில், இந்தியா - இலங்கை தொடர்பில் அதிக அக்கறை செலுத்தப்பட்டு வருகிறது. விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் காலம் நெருங்கி வரும் சந்தர்ப்பத்தில் இந்தியா தேவையற்ற தலையீட்டை மேற்கொள்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் காப்பாறவே இந்தியா மும்முரமாக முயன்று வருகிறது - என்றார்.

# வவுனியாவிலுள்ள அகதிகளை பார்வையிட 4ஆவது முறையாக அனுமதி கோரியது ஐ.தே.க.

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 29

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களைப் பார்வையிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களுக்கு அனுமதி வழங்குமாறு கோரி டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நான்காவது தடவையாகப் பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதுவரை அனுப்பப்பட்ட நான்கு கடிதங்களுக்கும் இதுவரை எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை என்று ஜயலத் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் இருந்து ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். அந்த மக்கள் அடிப்படை வசதிகள் எவையுமின்றி துன்பப்படுகின்றனர்.

மக்கள் இப்படிப் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து வருவர் என்று அரசு தெரிந்திருந்தும் கூட வரும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எவற்றையும் அரசு முன்கூட்டியே ஏற்பாடு செய்து வைக்கவில்லை.

அந்த மக்கள் மிகவும் துன்பப்படுகின்றனர் என்று அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களும் ஏனைய ஊழியர்க ளும் தெரிவித்துள்ளனர். அதிகமான பொது மக்கள் இந்த அகதிகளுக்கு உதவி வருகின்றனர்.

குறிப்பாக தென்பகுதி மக்களில் அதிகமானோர் தாமாக முன்வந்து உதவிகளை வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது கட்சி உறுப்பினர்களும் அகதிகளுக்கு வழங்குவதற்காக நிவாரணப் பொருள்களை சேமித்து வருகின்றனர். எமது கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் இந்த வேலைத்திட்டம் இடம்பெறுகின்றது.

எப்படி இருப்பினும் அந்த மக்களைச் சென்று பார்ப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு எமக்கு அனுமதி வழங்க மறுக்கின்றது. மதவாச்சியைத் தாண்டி எம்மால் போக முடியாமல் உள்ளது.

இந்தத் தடையை நீக்குமாறு நாம் பாதுகாப்பு அமைச்சிடம் பல தடவைகள் கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுத்தபோதிலும் எமக்கு இன்னும் எதுவித பதிலும் வழங்கப்படவில்லை.

நேற்றுமுன்தினமும் கூட இந்த அனுமதியைக் கோரி நான்காவது தடவையாக நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பினேன்.

அமைச்சர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோர் வவுனியா சென்று அந்த மக்களைப் பார்வையிட முடியும் என்றால் எதிர்க்கட்சியினராகிய எம்மால் ஏன் பார்வையிட முடியாது? நாமும் மக்கள் தானே. எமக்கு உடன் அனுமதி வழங்கப்படல் வேண்டும் - என்றார்.

# இடம்பெயர்ந்தோரின் அவசரத் தேவைகளை நிறைவேற்ற உதவுமாறு அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



கொழும்பு, ஏப்.29

''வன்னிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்திருக்கும் சுமார் இரண்டு இலட்சம் வரையிலான பொதுமக்கள் போதியளவு உணவு, தண்ணீர், மருந்துப் பொருள்கள், சிறுவர்களுக்கான பால்மா வகைகள், மாற்று உடுப்புகள், தங்குமிட வசதிகளின்றி மிகுந்த சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

''அரசும், பல்வேறு தொண்டு நிறுவனங்களும் இவர்களுக்கான உதவிப் பணிகளை முன்னெடுத்து வருகின்றபோதிலும், எதிர்பாராத அளவில் பெரும் எண்ணிக்கையில் வந்திருக்கும் இந்த மக்களுடைய அவசரத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. இதனால், இந்த மக்களுக்கு வேண்டிய அவசர உதவிகளை உடனடியாக முன் வந்து செய்யுமாறு மனிதாபிமான உள்ளம் கொண்ட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.''

- இவ்வாறு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்த அவரது அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இவர்களுக்கான அவசர உதவிப் பொருள்களான பிஸ்கட் வகைகள், போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர், பிற அனைத்துவகை உணவுப் பொருள்கள் மற்றும் உடுபுடவைகள், பாய், தலையணை போன்றவற்றை,இல. 61 இசிபத்தான மாவத்தை,கொழும்பு 5 இல் அமைந்துள்ள, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தந்தப் பிரதேசங்களில் உதவிப் பொருள்களைச் சேகரிப்பதற்கான மையங்கள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத் தரப்படும். இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்துகொள்வதற்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். 060 20 50 331, 060 20 50 329. இந்த அவசர மனிதாபிமான நிவாரணப் பணிக்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.

# சுவிடன் அமைச்சருக்கு விஸா வழங்க மறுப்பு: இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

கொழும்பு, ஏப். 29

சுவீடன் வெளிவிவகார அமைச்சர் ஹால் பில்ட்டுக்கு விஸா கொடுக்க மறுத்தமை பாரிய தவறு என ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு சுவிடனின் வெளி விவகார அமைச்சருக்கு விஸா வழங்க மறுத்தமை கவலைக்குரிய விடயம் என ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தற்போது தலைமை வகிக்கும் செக்குடியரசின் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை விஸா கொடுக்க மறுத்தமை பாரிய தவறாகும். ஐரோப்பாவில் கடும் எதிர் விளைவுகளை உண்டாக்கும். இலங்கைக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கள், செவ்வாய் தாக்குதல்களில் பாதுகாப்பு வலயத்தில் 200 பேர் கொலையுண்டனர்; ஆயிரம் பேர் படுகாயம்

கொழும்பு, ஏப்.29

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலய பகுதி நோக்கி திங்கள் மாலையில் இருந்து நேற்று செவ்வாய் பிற்பகல் வரை படையினர் நடத்திய அகோரமான பீரங்கி மற்றும் வான் தாக்குதல்களில் சுமார் 200 பேர் கொலையுண்டதாக இணையத்தளங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன.

நேற்றைய தாக்குதல்கள் குறித்து இணையத் தளங்கள் வெளியிட்ட ஏனைய தகவல்கள் வருமாறு:-

முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், சாளம்பன், ஒற்றைப்பனையடி மற்றும் ஐ.பி.சி வீதி ஆகிய பகுதிகளை நோக்கி படையினர் திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நேற்று பிற்பகல் 1 மணிவரை ஆட்லெறி, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் கனரக துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை அகோரமாக நடத்தினர்.

நேற்றைய தாக்குதல்களில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மூன்று மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெற்றனர்.

அத்துடன் வான்படையின் குண்டுவீச்சு விமானங்களும் இரட்டை வாய்க்கால், ஓட்டைப்பானையடி பகுதிகளில் தடை செய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகளை வீசியுள்ளதாக விடுதலைப்புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

மேலும் 2,600 வரையான குறுந்தூர பல்குழல் பீரங்கிக் குண்டுகள் 1,000 வரையான ஆட்லெறி நெடுந்தூர பீரங்கிக் குண்டுகள் 2,500 வரையான இடைத்தூர மோட்டார் பீரங்கிக் குண்டுகள் ஆகியன திங்கள் மாலை 6 மணியில் இருந்து செவ்வாய் பிற்பகல் 1 மணிவரை படையினரால் மக்கள் வாழ்விடங்களை நோக்கி வீசப்பட்டன என்றும் விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் இயங்கிவரும் முல்லைத்தீவு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் சிலரும் படுகொலையானவர்களுக்குள் அடங்குவர்.

மருத்துவமனை சூழலை நோக்கி சிறிலங்கா படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதல்களிலும் 18 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் இயங்கிவரும் முல்லைத்தீவு மருத்துவ மனையில் 428 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

நட்டாங்கண்டல் மருத்துவமனையில் 618 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றனர் - என்றும் இணையத்தளங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

## லண்டனில் உண்ணாவிரதம் இருக்கும் பரமேஸ்வரனின் இதயத்துடிப்பு குறைந்து வருவதாகத் தெரிவிப்பு



லண்டன், ஏப்.29

பிரித்தானியாவில் சாகும் வரை உண்ணா நிலைப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் தண்ணீர் அருந்துவதை நிறுத்தி விட்டார்.

நேற்று செவ்வாய் இரவு 8 மணியளவில் பரமேஸ்வரனின் இதயத் துடிப்புக் குறைந்து விட்டதாக வைத்தியர்கள் கூறியதாகத் தகவல்கள் வெளியாகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணி தொடக்கம் தண்ணீர் அருந்துவதை நிறுத்தி அவர் தனது போராட்டத்தைத் தொடர்கிறார்.

உலக சமூகம் எமது மக்களை ஏமாற்றி வருகிறது. எமது கோரிக்கைகளுக்கு அது பதிலளிக்காது காலத்தை இழுத்தடித்துக் கொண்டு செல்கின்றது. எனவேதான் உலக சமூகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வ்லியுறுத்தி தண்ணீர் அருந்துவதையும் நிறுத்தியுள்ளேன் - என்று அவர் தெரிவித்திருந்தார்.

இதனால் அவரது உடல் நிலை மோசமடைந்துள்ளதாக மருத்துவர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளனர். அங்கு தமிழ் மக்களால் இரவு பகல் பாராது கடந்த 24 நாள்களாக ஆர்ப்பாட்டமும் பரமேஸ்வரனால் 23 நாள்களாக உண்ணா நிலைப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(அ-7)

## இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை இந்தியாவில் இருந்து நாடு கடத்தக் கோருகிறார் காங்கிரஸ் பிரமுகர்

சென்னை, ஏப்.29

இலங்கை எம்.பி. சிவாஜிலிங்கத்தை நாடு கடத்த வேண்டும் என்று அதனை வலியுறுத்தி காங்கிரஸ் சட்டமன்றத் தலைவர் கோரியுள்ளார். பிரதமர் மன்மோகன்சிங், வெளியுறவுத்துறை மந்திரி பிரணாப் முகர்ஜி, உள்துறை மந்திரி ப.சிதம்பரம், தமிழ்நாடு முதல் அமைச்சர் கருணாநிதி, தலைமை தேர்தல் ஆணையர் ஆகியோருக்கு தமிழ்நாடு காங்கிரஸ் சட்டமன்ற தலைவர் டி.சுதர்சனம் அவசர தந்திகளை அனுப்பியுள்ளார்.

அதில், இலங்கை எம்.பி. சிவாஜிலிங்கம் என்பவர் ஓர் இந்தியாவைச் சேர்ந்த அரசியல்வாதியைப் போல தமிழகத்தில் தேர்தல் பிரசாரத்தில் நேரடியாக பங்கேற்று ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு ஆதரவாக, வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்திய அரசியல் சாசன சட்டப்படியும், சர்வதேச பாஸ்போர்ட் விதிகளின்படியும் ஒரு நாட்டைச் சேர்ந்த எவரும் வேறொரு நாட்டு அரசியலில் தலையிடக்கூடாது. இந்த அடிப்படை நெறிமுறையை மீறி சிவாஜிலிங்கம் என்ற இலங்கை எம்.பி. தற்போது தென்சென்னை பா.ஜ.க. வேட்பாளர் இல.கணேசனுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார்.

அதோடு மட்டுமில்லாமல், காங்கிரஸ் தலைவர்களைப் பற்றியும், மத்திய மற்றும் தமிழக அரசுகள் பற்றியும் தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தி தனது பிரசாரத்தில் விமர்சனங்கள் செய்து வருகிறார். அவரது இச்செயல் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கும், சர்வதேச பாஸ்போர்ட் விதிமுறைக்கும் முற்றிலும் எதிரானதும், கடுமையான தண்டனைக்கு உரியதும் ஆகும்.

எனவே, இந்தியாவில் குழப்பம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டுள்ள சிவாஜிலிங்கத்தின் பாஸ்போர்ட்டை உடனடியாக ரத்து செய்து அவரை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று அந்தத் தந்தியில் கோரப்பட்டுள்ளது. (அ)

### வடபகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் தற்போதைய நிலைமையை அமெரிக்கா மிகவும் பாரதூரமானதாகக் கருதுவதற்கான அறிகுறியே இக்கூட்டம் என அதில் கலந்துகொண்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இலங்கை நிலைவரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நாளாந்தம் தகவல்களைப் பெற்று வருகிறார் என்றும் - வெள்ளைமாளிகை, நிலைவரத்தை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்றும் - அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு மனிதாபிமானப் பணியாளர்கள் செல்ல அனுமதி வழங்குமாறு அமெரிக்கா மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லையென்ற இலங்கை அரசின் அறிவிப்பு மிகவும் உற்சாகமளிக்கிறது எனத் தெரிவித்துள்ள அமெரிக்கா, விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பையும் வரவேற்றுள்ளது.

இதனை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரொபேர்ட் வூட் தெரிவித்தார்.

இரு தரப்புகளும் தாங்கள் விடுத்துள்ள உறுதி மொழிகளை நிறைவேற்ற வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம் எனவும் தெரிவித்துள்ள அவர், இலங்கையில் மனிதாபிமான நிலைமைகள் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

### இராணுவத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது குறித்து மேலும் குறிப்பிட்டதாவது:-

தீவிரவாதத்தை நமது மண்ணில் இருந்து ஒழிக்கும் இக்கட்டான கால கட்டத்தை நாம் வெற்றிகரமாகக் கடந்துவிட்டோம். உழைக்கும் வர்க்கத்தின் ஒரு பகுதியான நமது இராணுவத்தினர் வரலாற்று சிறப்புமிக்க அந்தப் பணியை நிறைவேற்றி விட்டனர். நமது மண்ணில் மூன்றில் இரண்டு பங்கு பகுதியிலும், மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினருக்கும் நீண்ட காலமாக மறுக்கப்பட்ட சுதந்திரம், இனி அனைத்துப் பகுதியிலும், அனைத்து மக்களிடமும் மலரப்போகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தையை தமிழ்ப் போராளிகள் (விடுதலைப்புலிகள்) நிராகரித்ததால்தான், அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. எந்த ஒரு நாட்டுக்கும், தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு இராணுவத் தாக்குதலை நடத்துவதற்கு உரிமை உண்டு. அது குறித்து எவரும் கேள்வி எழுப்ப முடியாது - என்றார். (அ)

### இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய விடயங்களைக் கடைப்பிடிக்கிறது.

முதலாவது, மோதலை முடிவுக்குக் கொண்டு வந்தது. இரண்டாவது, மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. பொதுமக்களுக்கு எந்தவித இழப்புகளும் ஏற்படாமலே இலங்கை அரசு மக்களை மீட்கின்றது.

இலங்கை இராணுவம் பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிடமிருந்தே இராணுவத் தளபாடங்களைப் பெற்றுக் கொள்கிறது.

சிலவேளைகளில் சில பாதுகாப்பு ராடர்கள் மற்றும் தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே இலங்கை அரசு எம்மிடமிருந்து பெற்றுக் கொள்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், சக போராளிகளும் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். இதுவே எனது வேண்டுகோள் - என்றார். (சி)

### வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர் நடக்கும் பகுதியில் சிக்கியுள்ள மக்கள் மத்தியிலும், நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் மத்தியிலும் மனிதாபிமானப் பணியாளர்கள் செல்வதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்.

மோதல் நடைபெறும் பகுதியிலிருந்து தப்பிவரும் மக்களுக்கு தற்போதைய வசதிகள் போதுமானவையல்ல.

புதிதாக மோதல் பிரதேசத்தில் இருந்து வெளியேறி வரும் மக்களுக்கு உடனடியாக தண்ணீர், மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் என்பன தேவை.

அதேவேளை, இடம்பெயர்ந்து வாழும் மக்கள் வெகுவிரைவில் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றப்பட வேண்டும் - என்றார்.

(அ-சி)

### சுவீடிஷ் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளை அவர்கள் அழிக்க முயல்கின்றனர். பயங்கரவாத அமைப்பென்ற ரீதியில் இதனை புரிந்துகொள்ளலாம். எனினும், ஆயிரக்கணக்கான மக்கள் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்குண்டுள்ளனர். இந்த மக்களுடைய உயிர்களை மனிதாபிமான நிலையை கருத்திற்கொள்ளவேண்டும் என்றும் சுவீடனின் வெளிவிவகார அமைச்சர் கேட்டுள்ளார்.

பிரிட்டிஷ், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்களுடன் சுவீடனின் வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்தார்.

இலங்கை அரசை விடுதலைப் புலிகளுடன் உடனடி யுத்தநிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு தீவிரமாக வலியுறுத்துவதற்காகவே இவ்விஜயம் இடம் பெறுகிறது.

எனினும், இலங்கை அதிகாரிகள் தனக்கு அனுமதி மறுத்துள்ளனர் என பில்ட் தெரிவித்துள்ளார்.

### வலைஞர்மடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை,பாதுகாப்பு வலயத்தில் இரட்டை வாய்க்கால் • பகுதியில் விடுதலைப்புலிகளின் 700 மீற்றர் நீளமான மண் அரணை படையினர் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

வலைஞர் மடத்திற்கு தென், தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மண் அரண்களையே படையினர் கைப்பற்றியுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### ஜனாதிபதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல்கள் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின்படி ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 70 சதவீத வாக்குகள் கிடைக்கும் எனவும், ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறும் அமைச்சர் எதிர்க் கட்சியினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

### சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற அரசாங்கத்தின் அறிவித்தலை சில ஊடகங்கள் திரிபுபடுத்திவிட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் ஆயுதப் படையினருக்குத் துரோகம் இழைக்கும் வகையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்பட்டுவிட்டது என ஜே.வி.பி. பிரச்சாரம் ஒன்றை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர், அந்தத் தகவல் தவறானது எனவும் போர் நிறுத்தம் எதனையும் அரசாங்கம் ஒருபோதும் நடைமுறைப்படுத்தப் போவதில்லை எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (அ)

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
Diploma in Computerized Accounting
Quick Book, ACCPAC, MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Week Day Batch 30/04/2009 05/05/2009 11 AM
Week End Batch 02/05/2009 03/05/2009 10 AM
COMPUTER EXPRESS Institute of Information Technology

O/L Day Class (8.30-2.00)
பிரிவு I ஒரு சில அனுமதிகள் மட்டும் AP 30மட்டும்.
பிரிவு II 01.05.2009 8.30 மணி
* இவ்வருடம் பிரிவு 06 மட்டும்
* விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்
* 33 வருடமாக O/L DAY CLASS கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கமாகவும் நடைபெறும் ஒரே இடம்
விக்னா
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Group Classes
A/L 2011
Com. maths S.M.Lingeswaran
Physics S.Uiroviyam
2/1, மருதடி வீதி, நல்லூர்
தொ.பே.: 0776258074, 0779953754

SUBRA (14)
சித்தன்கேணி
இரசாயனவியல் 2009 A/L
அயன் சமநிலை
ஆரம்பம் - 29.04.2009
Mon, wed, fri:- 4.00-5.00
By - RAJAH

Background CD
Video Backgrounds & Album Backgrounds
Karisma Album, Digital Album, Visiting Cards, Invitation, Digital Flex Psd Images Available
Star Digital
077 1308636, 077 8893465

SHAMROCK
O/L DAY CLASS
(BEST STAFF)
* மாதாந்தப் பரீட்சைகளுடன் ஊக்குவிப்புப் பரிசில்களும்
* தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்.
"ஜெயம் வெளியீடு" பரீட்சைகளுடன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org